Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

**English Academy**
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
மின் அஞ்சல் — thangan 672002 @ yahoo.com
உங்கள் பிள்ளைகளுக்கு
சிறந்த இடம்

Better Place
for your children

சங்கு 04 | வள்ளுவர் ஆண்டு 2034 | தை05 ஞாயிற்றுக்கிழமை (19.01.2003) | தொலைபேசி~ 2223378 | ஒலி 31

# அதி உயர் பாதுகாப்பு வலயம்

# சமாதான முயற்சிக்கு முட்டுக்கட்டை

## பிரித்தானியக் குழுவிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் யுத்தநிறுத்தம் செய்து ஒரு வருட காலம் கடந்து சமாதான முயற்சிகள் தொடர்கின்ற போதிலும் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் பொரும் முட்டுக் கட்டையாக அதியுயர் பாதுகாப்பு வலயம் இருப்பதாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் பிரித்தானிய தூதுக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.**

பிரித்தானியத்தூதுவர் ஸ்ரீபன் இவான்ஸ்தலைமையிலான தூதுக் குழுவினர் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப் பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை நேற்று முற்பகல் சந்தித்துப் பேச்சுவார் த்தை நடத்தியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் உள்ள விடுத லைப் புலிகளின் நடுவப் பணியகத் தில் நடைபெற்ற இச்சந்திப்பு நேற்று முற்பகல் 11.30மணி முதல் பிற பகல்1.45மணி வரை நடை பெற்றது.

இப் பேச்சுவார்த்தையின் போது பிரித்தானியத்தூதுவர் ஸ்ரிபன் இவா னஸ் தலைமையிலான தூதுக் குழு வினரிடம் சு.ப.தமிழ்ச்செல்வன் மேலும் தெரிவித்திருப்தாவது.

யுத்த அனர்த்தம் காரணமாக இடம் பெயர்ந்த மக்கள் தமது சொநத இடங்களுக்குச் சென்று மீளக்குடியே றாத நிலை. இருப்பதால்,அது ஒரு அடிபபடை மனித உரிமையை மீறும் செயலாகும்.

போரினால் வெளியேறிய மக்கள் போர் ஓய்வான நிலையில் தமது சொந்த இடத்தில் மீளக்குடியமர வேண்டும் ஆனால் இந்த உரிமை இன்னமும் அந்த மக்களுக்கு வழங் கப்படவில்லை.(10ம் பக்கம பார்க்க)

## பாதுகாப்பு உபகுழுவில் இருந்து புலிகள் விலகியது துன்பகரமானது

### எரிக்சோல்ஹெய்ம் தெரிவிப்பு

(ஒஸ்லோ)

விடுதலைப் புலிகள் பாதுகாப்பு உப குழுக் கூட்டத்தில் இருந்து விலகியமை பலத்த அதிர்ச்சியைத் தந்துள்ளதுடன் அது ஒரு துக்ககர மான நிகழ்வாகும் என்று நோர்வே யின் விஷேட தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் பாதுகாப்பு உப குழுக் கூட்டத்தில் இருந்துவில கியமை தொடர்பாக எரிக்சொல ஹெய்ம் மேலும் கருத்துத் தெரி விக்கையில்;

விடுதலைப் புலிகள் பாதுகாப்பு (10ம் பக்கம் பார்க்க)

## இலங்கை நிர்வாக சேவை வெற்றிடம் நிரப்பப்படும்

(கொழும்பு)

இலங்கை நிர்வாக சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவதற்கு அரசு தற்போது நடவடிக்கைகளை எடுத்துள்ளதாக பொது நிர்வாக அமைச்சின் செயலாளரிற்கு விமல சிறி தெரிவித்துள்ளார்.

இலங்கை நிர்வாக சேவையில் உள்ள வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக அவர் மேலும் தகவல் தருகையில்;

இலங்கை நிர்வாக சேவையில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்பு வதன் மூலம் அரசாங்க சேவையைத் திறம்பட மேற்கொள்ள முடியும். (10ம் பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண பெல்ஜீயம் சமஷ்டி முறை சிறந்தது

### அந் நாட்டு சபாநாயகர் இலங்கைக் குழுவிடம் தெரிவிப்பு

(கொழும்பு)

பெலஜீயத்தில் நடை முறையில உள்ள சமஷ்டி முறையானது சிறு பான்மை உட்பட சகல இனங்களின் உரிமைகளையும் பாதுகாக்கக் கூடிய சிறநத ஒரு முறையாகும் என பெல் ஜீயத்தின் சமஷ்டி பாராளுமன்ற சபாநாயகர் ஹெதர் மண்டிகுனோ தெரிவி த்துள்ளார்.

சமஷ்டி அமைப்பு முறையிலான நாடுகளில் சமஷ்டி அரசில் அமைப்பு எவ்வாறு அமுல் நடத்தப்படுகிறது என்பது தொடர்பாக அறிந்து கொள் வதற்கு இலங்கையில் இருந்து பெல் ஜீயம் சென்றுள்ள அரசாங்க எதிர்க் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களை பாராளுமன்றத்தில் வரவேற்றுப் பேசு கையிலேயே சபாநாயகர் ஹெதர் மன்டிகுனோ மேற்கண்டவாறு தெரி வித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் பேசுகை யில் இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வற்கு இலங்கை அரசும், தமிழீழ (09ம் பக்கம் பார்க்க)

## வட கிழக்கில் அமைந்துள்ள பௌத்த விகாரைகளை பாதுகாக்க இந்தியா பூரண ஆதரவு வழங்கும்

(கொழும்பு)

வடக்கு கிழக்கு மாகாணங்களில் அமைந்துள்ள சரித்திர முக்கியத் துவம் வாய்ந்த பௌத்த விகாரை களைப் பாதுகாப்பதற்கு,இந்தியா தனது முழு ஆதரவையும் வழங்கு மென்று,இலங்கைக்கான இந்தியத் தூதுவர் நிருபன் சென் தெரிவித் துள்ளார்.

நேற்று முன்தினம் கண்டி தலதா மாளிகைக்கு விஜயம் செய்த தூதுவர் சென் அங்கு நிரஞ்சன் விஜயரத்தினாவைச் சந்தித்து பேச்சு நடத்தினார்.

வடக்குக் கிழக்கு மாகாணங் களில் சரித்திர முக்கியத்துவம் வாய் ந்த 261 பௌத்த விகாரைகள் (09ம் பக்கம் பார்க்க)

## அரசையும்-புலிகளையும் சமமான அமைப்பாக யப்பான் கருதுகிறது

(கொழும்பு)

வடக்கு கிழக்கு பிரச்சினைக்குப் பேச்சுக்கள் மூலமான தீர்வே காணப் பட வேண்டும்.இலங்கையின் இன்றைய சமாதானப பேச்சுக்கள் முன்னேறுவது பற்றி யப்பான் பெரு மகிழ்ச்சியடை கிறது.நோர்வேயின் அனுசரணை முயற் சிகளும் மகிழ்ச்சி தருகின்றன.

இவ்வாறு யப்பானின் விஷேட தூதுவர் யசுஷி அகாஷி ஜே.வி.பியின் தூதுக்குழுவிடம் தெரிவித்துள்ளார்.

## ஜே.வி.பிக்கு யப்பான் தூதுவர் பதிலடி

தூதுக்குழுவில் பாராளுமன்ற உறுப்பினர்கள் விமல் வீரவன்ச,பிமல் ரத்திநாயக்கா ஆகியோரும் அடங் யிருந்தனர்.

நோர்வே தனது அனுசரணையா ளர் பொறுப்பிற்கு அப்பால் சென்று புலிகளுக்கு வானொலிக் கருவிக ளைப் பெற்றுக் கொடுத்திருப்பதாக ஜே.வி.பியினர் இச்சந்திப்பின் போது அதிர்ப்தி தெரிவித்தனர்.புலிகள் இன்னும் ஆயுதங்களை கைவிடவில்லை சமாதான நடவடிக்கைகள் புலிகளைப் பலப்படுத்துகின்றன என்றும் அவர்கள் கவலை தெரிவித்தனர்.

அதற்குப் பதிலளித்துக் கருத்துக (09ம் பக்கம் பார்க்க)

## தமிழக டாக்டர்கள் வரவழைக்கப்படுவர்

(திருகோணமலை)

வடக்குக் கிழக்கு மாகணங்களில் உள்ள வைத்தியசாலைகளில் நில வும் டாக்டர்களுக்கான தட்டுப்பாட்டை நீக்கதமிழகத்தில் இருந்து வைத்திய அதிகாரிகளை வரவழைப்பதற்கான நடவடிக்கைகளை மாகாணசுகாதாரப் பணிமனை மேற் கொண்டுள்ளது.

கிளிநொச்சி மன்னார் மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங் களில் நிலவும் வைத்தியர்களின் பற்றாக்குறையை நீக்கவே இந் நட வடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ள தாக தெரிவிக்கப்படுகின்றது.

(இ-5)

SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB

AIR LINE
Jaffna Special Feel The Differences

SERENDIB விமான சேவை

தலைமையகம்
500,Galle Roade,
Wellawatta,
Colombo-06
Tel:505632 Fax:500626

தலைநகர்
67A.Wolfendhal Street,
Colombo-13
Tel:01-390128 Fax:074-612656
Hotline:-0777-517019



யாழ்ப்பாணம்
Serendib
New Market Building,
13,Power House Road,
Jaffna.
Tel:021-2223916
0777-801038

(C/5644)

SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB SERENDIB

# பிறந்த திகதிக்குப் பொருந்தப் பெயரமைத்து சிறந்ததாக வாழ்க்கையைச் சீர்செய்யுங்கள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

*6. சுக்கிரன் பொதுப்பலன்.*

சுக்கிரனைப்பற்றி அறியாதவர்கள் உலகில் யாரும் இல்லை எனலாம். இது நம் நாட்டு வழக்கில் வெள்ளி எனக்கூறுவர். சிலருடைய முன்னேற்றத் தையும்,அவர்களுடைய சுகபோக வாழ்க்கையும் பார்த்து மற்றவர்கள் விமர்சிக்கும் போது ''அவனுக்கு என்ன சுக்கிர திசைஅடிக்கிறது'' எனக்கூறுவர். சுக்கிரன் என்றாலே ஆடம்பரம், பகட்டு என்பது எல்லோர் மனதிலும் உள்ளது. இப்படிப்பட்ட சுக்கிரனைக் கிரகங்களின் அசுரகுரு என அழைக்கப்படுகின்றது.

இந்த உலகத்தில் உள்ள எல்லா சுகபோக பாக்கியங்களையும் அனுபவிக்கத்தூண்டும் தன்மையுடையது சுக்கிரன். ஆனால் பெயர் நன்றாக அமையாவிட்டால் பெண்கள் ஆண்களாலும், ஆண்கள் பெண்களாலும் கெடும் நிலை உண்டாகிவிடும். பொதுவாகவே இந்த ஆதிக்கக்காரர் களின் நடவடிக்கைகள் கவர்ச்சியானதாக இருக்கும். பார்க்கும் போதே புன்முறுவலுடன் காட்சியளிப்பர். எப்போதும் சுகங்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டிருப்பர். பணக்காரர்களாக வாழும் இவர்கள் துன்பங்களை அதிகம் நினைக்காது இன்பகரமான நிகழ்ச்சிகளைப் பற்றியே சிந்தனை செய்துகொண்டிருப்பர். நாம் இறக்கப்போகும் மனிதன் தானே உலகத்தில் உள்ளதை நன்கு அனுபவித்து விட்டு இறப்போம் எனக் கொள்கை கொண்டவர்கள். இவர்களில் ஒன்பது வகையினர் உண்டு.

*உடல் எண் 6*

*கூட்டு எண்ணாகிய உயிர் எண் –1*

6,15,24, போன்ற திகதியில் பிறந்து திகதி,மாதம்,வருடம் ஆகிய மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகியஉயிர் எண்1 வருமேயானால் சுக்கிரன்,சூரியன் ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் பார்ப்பதற்குக் கவர்ச்சியாகவும் காட்சியளிப்பர். இவர்கள் பேசுகின்ற போது மற்றவர்கள் கேட்கும் அளவிற்கு கவர்ச்சியாக இருக்கும். இந்த உலகத்தில் பிறந்த நாம் எல்லா சுக போகங்களையும் அனுபவிக்க வேண்டும் என்று எண்ணுவர். இந்த எண்ணிக்கையில் பிறந்த பலர் வசதி உள்ளவர்களாக இருக்கின்றனர். மிடுக்கான தோற்றம் கொண்ட இவர்கள் தான் பேசுகின்றபோது சுத்தமாகவும், அழகாகவும் பேசுவர்.

## சோதிடபலன்

இவர்களது பெயர் பிறந்த திகதிக்கு பொருத்தமானதாக அமையுமேயானால் உலகில்பெற வேண்டிய பாக்கியங்களையெல் லாம்பெற்று, வீடு வாகனம், நிலம்,போன்ற எல்லா வசதிக ளுடன் வாழ்வர். ஆனால் பெயர் பொருத்தமற்ற நிலையில் இருக்குமேயானால் இவர்களுக்கு எல்லாவி தமான வாய்ப்புக்கள் இருந்தும் கஷ்டத்துக்குள்ளாகிறார்கள்.

வாகனப்பிரியரான இவர்கள் தான்பயன்படுத்தும் வாகனங்களை அழகுபடுத்தி வைத்துக்கொள்வர். இயற்கைக் காட்சிகளையும், மலைப்பிரதேசங்களையும் நீர் வீழ்ச்சிகளையும் கண்டுகளிக்க ஆசைப்படுவர்.சிலர் துாரதேச பயணங்கள் செய்வதில் ஆர்வம் உள்ளவராக இருப்பர். எப்போதும் துாய்மையாக காட்சியளிக்கும் இவர்கள் எந்த ஒருபிரச்சினை வந்தாலும் அலட்டிக்கொள்ளாது செயல்படுவர். இவர்கள் பேசுகின்ற மொழி சுத்தமாகவும், சுருக்கமாகவும் இருக்கும். அதிகம் சிரமப்படாமல் பணம்ஈட்டும் பாக்கியம் உள்ளவர்கள். இவர் களிற் சிலர் உயர்ந்த உத்தியோகத்திலும், இன்னும் சிலர் சிறிய உத்தியோகத்திலும் இருக்கின்றனர். உத்தியோகம் பார்க்கும் இவர்கள் கூட்டு சம்பந்தமான தொழில் செய்யவும் முற்படுவர். ஆடம்பரப்பிரியரான இவர்களுக்குப் பகட்டுச் சம்பந்தமான தொழில் செய்யவும் வாய்புக் கிடைக்கும். எந்த ஆடையை அணிந்தாலும், கவர்ச்சியாக தோற்றம் அளிக்கும் இவர்கள் பெண்களாக இருந்தால் ஆண்களிடம் பழகும் போது கவனமாகவும், ஆண்களாக இருந்தால் பெண்களிடம் நிதானமாகவும் இருக்க வேண்டும்.

ஆனால் ஆரம்பத்திலே பிறந்த திகதி எண்களுக்கு பொருத்தமான பெயர் அமையுமேயானால் இவர்களது வாழ்க்கை படிப்படியாக உயர்ந்து கொண்டே போகும். இவர்களுக்கு எதிர்பு எண்ணான 3 எண்ணிக்கையில் பெயர் அமையுமேயானால் எல்லா விதமான பலன்களும், தலைகீழாக மாறிவிடும். இவர்களுக்குப் பெயர் நன்றாக அமையாவிட்டால் வெளிநாட்டுப் பயணங்களும், தலைகீழாக மாறிவிடும். இவர்களுக்குப் பெயர் நன்றாக அமைந்துவிட்டால் வெளிநாட்டுப் பயணங்களும், உல்லாசப் பயணங்களும் செய்யும் வாய்ப்பும் உண்டாகும்.

எல்லோரிடமும் பழக்கம் வைத்துக் கொள்ளாத இவர்கள் குறிப்பிட்ட நல்ல நண்பர்களை வைத்திருப்பார்கள். தனக்கு இலாபமில்லாத காரியங்களில் இறங்கி வீண்பொழுது போக்க மாட்டார்கள். எக்காரியத்தில் இறங்கினாலும் அதில் அவர்களுக்கு வருமானம் வரக்கூடியதாகவே இருக்கும். சில நேரங்களில் மிடுக்காக பேசிக் கடுமையானவராக நடந்து கொள்வர். ஆனால் இவர்கள் கடுமையானவரல்லர். சில நேரங்களில் தன்னைப் பற்றி தனிமையில் சிந்திப்பர். வயது கூடினாலும் கவர்ச்சி குறையாது, மகிழ்ச்சியாகவும்,உல்லாசமாகவும் வாழ ஆசைப்படுவார்கள். கண்ணாடியை அணியும் போதும் கூட அழுகான பிரேம் தான்அணிவர். வீட்டை அலங்கரிப்பதிலும், துாய்மையாக வைத்துக்கொள்வதிலும் ஆர்வம் கொண்டவர்கள்.

சட்டம், சமயம், கணிதம், ஜோதிடம், கைநுணுக்கத்தொழில் போன்றவற்றில் ஆராய்ச்சி இருக்கும். கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்கள் முயன்றால் முடியாதது இல்லை என்று கூறுவர். உயர்ந்த நிலையில் வாழ்பவர்கள் கூட பெயர் பொருத்தமற்று அமைந்து விட்டால் தன் தகுதிக்கு குறைவான, பெண்களிடம் பழகிக் கஷ்டத்துக்குள்ளானதை நான் கண்டிருக்கின்றேன். ஆனால் பெயர் பொருத்தமானதாக அமையப் பெற்றவர்கள் எல்லாவளமும் பெற்று, சீரும் சிறப்புமாக வாழ்கின்றனர்.

*தொழில*

ஆடம்பரப்பொருட்கள் சம்மந்தமான தொழில், காண்ட்ராக்ட், ஏஜென்ஸீஸ், இரும்பு, நெருப்பு சம்பந்தமான தொழில், வாகனத்தால் ஆனதொழில் இவர்களுக்கு நன்மை அளிப்பவையே.

ஆர்.ஐ.துரைமுருகர்

*நோய்*

பொதுவாக இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு உஷ்ணம் சம்பந்தப்பட்ட நோய்கள், நீர் சம்பந்தப்பட்ட நோய்கள், வாயுக்கோளாறு, மூலவியாதி, இரத்த அழுத்தம் போன்றவை வந்து நீங்கும்.

*பெயர் அமைக்கும் முறை*

இந்த ஆதிக்கத்தில் பிறந்தவர்களுக்கு சுக்கிர, சூரியன் ஆதிக்கமான 15,24,33,42,60,69; 19,37,46,64,பொன்ற எண்களில் பெயரை அமைத்துக் கொண்டு சிறப்பாக வாழலாம்.

*பின்பற்றவேண்டியவை*

• யோகமான எண் -6,1 யோகமான திகதிகள்-1,10,19, 28; 6,15,24; 9,18,27,யோகமான மோதிரக்கல்- மகரதம் (Emerald) யோகமான நிறம்- மஞ்சள், பச்சை, ஆகாத திகதிகள்-3,12,21,30 ஆகாத நிறம்-ஆரஞ்சு, றோஸ், கத்தரிப்பூநிறம், கறுப்பு

(தொடரும்)

## தேவை

தொலைத் தொடர்பு நிலையமொன்றிற்கு உதவிக்கு பெண்பிள்ளை தேவை

தொடர்பு:-
சுமன் தொலைத் தொடர்பு நிலையம்.
இல.670 மானிப்பாய் வீதி,
ஆலடிச்சந்தி
ஒட்டுமடம்

(6468)

## தரமான தேயிலைச் செடிகள் வழங்கல

(கொழும்பு)

இலங்கை தேயிலை உற்பத்தித் தொழிலைவிருத்தி செய்யும் வகையில் தரமான தேயிலைச்செடிகளை வழங்கும் திட்டம் ஒன்றை இலங்கை தேயிலை ஆராய்ச்சி நிலையம் மேற்கொண்டுள்ளது. (உ-10)

## ரெலிக்கொம் நிறுவன தனியுரிமை நீக்கப்படும்

*இம்தியாஸ் தெரிவிப்பு*

(கொழும்பு))

வெளிநாட்டு அழைப்புக்கள் மற்றும் தொலைபேசி இணைப்புக்கள் தொடர்பாக ஸ்ரீலங்கா ரெலிக்கொம் நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ள தனியுரிமை எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் 'நீக்கப்படும்.

இவவாறு ஊடகத் துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கிர்மாஸ்ரீக்கர் தெரி வித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், கிராமப் பிரதேசங்களிற்கு தொலை பேசி இணைப்புக்களை விஸ்தரிக்கும் நோக்கில் வேறு நிறுவனங்களுக்கும் உரிமைகளைப் பொற்றுக் கொடுக்கும் வகையில் தெலை பேசிச் சட்டம் இவ்வாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.

கிராமப் புறங்களுக்கு தொலை பேசிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கு சலுகைகளைப் பெற்றுக் கொடுக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது என அமைச்சர் கூறியுள்ளார். (உ-10)

## விளையாட்டுச் செய்தி

## அவுஸ்திரேலிய வீரர் டரல்லீமன் ஐந்து போட்டிகளில் விளையாட தடை!

### இலங்கை வீரர்களை கறுப்பர் என தூசித்தாராம்

(சிட்னி)

அவுஸ்திரேலிய கிரிக்கெட் வீரர் டரல்லீமனுக்கு சர்வதேச கிரிக்கெற் பேரவை, ஐந்து போட்டிகளில் விளையாடத் தடை விதித்துள்ளது.

வி.பி.கிண்ண முக்கோணப் போட்டிகளின் எஞ்சிய போட்டிகளில் விளையாடத் தடை விதிக்கப்பட்டதோடு, 'அடுத்தமாதம் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ணக் கரிக்கெட் போட்டித் தொடரில் சிம்பாவேக்கு எதிரான போட்டியில் விளையாடும் சந்தர்ப்பமும் இல்லாமல் போகும் நிலை உள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கை' அவுஸ்திரேலிய அணிகளுக்கிடையே கடந்த புதன்கிழமை நடைபெற்ற போட்டியின் போது, டரல்லீமன் இலங்கை அணிவீரர்களை கறுப்பினத்தவர்கள் என தூசித்தார் என்பதனாலேயே இத்தண்டனை வழங்கப்பட்டுள்ளது.

சர்வதேச கிரிக்கெட் சட்டங்களுக்கு அமைய எதிர்தரப்பு வீரர் ஒருவருக்கு அபகீர்த்தியை ஏற்படுத்துவதற்கு எதிரான சட்டத்தின் கீழ் இவருக்கு போட்டித்தடை விதிக்கப்பட்டுள்ளது. இதேவேளை இச்சட்டம் அறிமுகப் படுத்தப்பட்ட பின்னர் முதல் போட்டித் தடை விதிக்கப்பட்ட வீரர் இவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-5)

## அவுஸ்திரேலிய அணி வீரர்கள் இருவர் பங்குபற்றமாட்டார்கள்.

(சிட்னி)

வி.பி.கிண்ண கிரிக்கெட் தொடரில் அவுஸ்திரேலியா அணிக்கும் இங்கிலாந்து அணிக்கும் இடையில் இன்று நடைபெறவுள்ள போட்டியில், அவுஸ்திரேலிய முன்னணி வீரர்கள். இருவர் கலந்து கொள்ள மாட்டார்கள் என தெரிவிக்கப் படுகின்றது.

இப் போட்டியில் ரிக்கி பொண்டிங் மற்றும் வேகப்பந்து விச்சாளர் கிளைன் மக்ராத் ஆகிய இருவருமே விளையாட மாட்டார்கள் என்று தெரிவிக்கப்படுகின்றது.

உடலில் ஏற்பட்ட உபாதை காரணமாக இவர்கள் பங்குபற்ற மாட்டார்கள் என்று கூறப்படுகின்றது. (இ-5,3)

## இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகள் இன்று மோதும்.

(சிட்னி)

வி.பி.கிண்ண கிரிக்கெட் போட்டியில் இன்று இங்கிலாந்து, அவுஸ்திரேலியா அணிகள் மோதவுள்ளன.

இன்றைய போட்டியில் இங்கிலாந்து அணி வெற்றி பெற்றால், இலங்கை அணி அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டியில் வெற்றி பெற்றாலும் இறுதிப் போட்டிக்கு தெரிவாகும் நிலை இலலாமல் போகும்.

இங்கிலாந்து அணி போனஸ் புள்ளிகளை பெறாத நிலையில் தோல்வி அடைந்தால் மாத்திரமே இறுதிப் போட்டிக்கு இலங்கை அணி தெரிவாகும் சாத்தியம் உள்ளது.

தற்போது இங்கிலாந்து அணி 19 புள்ளிகளையும் இலங்கை அணி 14 புள்ளிகளையும் பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (இ-5)

## போதைப் பொருள் ஒழிப்புக்கு விசேட திட்டங்கள்.

(கொழும்பு)

போதைப் பொருட்களை ஒழிக்கும் பொருட்டு இவ்வருடம் விசேட திட்டங்கள் நடைமுறைப் படுத்தப்படவுள்ளதாக உள்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

இதன் பொருட்டு போதைப் பொருள் ஒழிப்பு நடவடிக்டகைக்கு அரசாங்க, மற்றும் தனியார் அமைப்புக்களின் உதவி பெற்றுக் கொள்ளப்படுவதுடன் இலங்கைக்கு பெருமளவு போதைப் பொருட்களை கடத்தி வரும் நபர்களுக்கெதிராக கடும் நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக சுங்கத் திணைக்களம் மற்றும் அபாயகரமான மருந்துப் பாவனையைக் கட்டுப்படுத்தும் சபை, பொலீஸ்மா அதிபர் ஆகியோரிடம் இருந்து அறிக்கையைப் பெறவுள்ளதாகவும் உட்துறை அமைச்சர் கூறியுள்ளார். (உ-10)

## உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டி நவீன டயறி வெளியீடு

(கொழும்பு)

அடுத்த மாதம் தென்னாபிரிக்காவில் நடைபெறவுள்ள உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி பற்றிய நவீன டயறி தென்னாபிரிக்காவில் வெளியிடப்பட்டுள்ளது.

உலகக் கிண்ண அட்டவணை, வீரர்களின் புகைப்படங்கள், புள்ளி விபரங்கள், சாதனைகள் ஆகியவை இவ் டயறியில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதில் முதல் கட்டமாக 7 இலட்சம் பிரதிகள் அச்சடிக்கப் பட்டுள்ளன. (உ-3)

## சிம்பாவேயில் விளையாட இங்கிலாந்து அணி சம்மதம்

(கொழும்பு)

சிம்பாவே நாட்டில் நடைபெறவுள்ள உலகக்கிண்ண போட்டிகளில் பங்கேற்க இங்கிலாந்து கிரிக்கெட் அணிசம்மதம் தெரிவித்துள்ளதாக இஙகிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது .

இவ்அறிவிப்பு உலகக் கிண்ண போட்டி நிர்வாகிகளுக்கு பெரும் மகிழ்ச்சி அளித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இது குறித்து தென்னாபிரிக்கா உலகக் கிண்ண அதிகாரி ஜோஸ் சார்லி கருத்து தெரிவிக்கையில் இங்கிலாந்தின் இவ்அறிவிப்பு பெரிய பிரச்சனைக்கு முற்றுப்புள்ளி வைக்கும். விரைவில் அவுஸ்ரேலிய அணியும் சிம்பாவேயில் விளையாட சம்மதம் தெரிவிக்கும் என எதிர்பார்க்கிறோம் என்றார்.

எதிர் வரும் 13ஆம் திகதி சிம்பாவே அணிக்கு எதிராக ஹராரே நகரில் நடைபெறும் போட்டியில் இங்கிலாந்து அணி விளையாடவுள்ளது.

உலகக்கிண்ண போட்டியில் 54 ஆட்டங்களில் 6 ஆட்டங்கள் சிம்பாவேயில் நடக்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-3)

## வடக்கிற்கு வழங்கும் நிதி உதவிகள் தெற்கில் பிரச்சினைகளை உருவாக்கும்

### மகிந்த ராஜபக்ஷ யசுஷி அகாஷிடம் தெரிவிப்பு





(கொழும்பு)

இலங்கையின் ஒரு பகுதியை மட்டும் அபிவிருத்தி செய்து இன்னுமொரு பகுதியை புறக்கணிப்பது தென்னிலங்கையில் புதிய பிரச்சினைகளை உருவாக்கலாம்.

வடக்கை அபிவிருத்தி செய்வது எவ்வளவு முக்கியமோ அதேபோன்று தெற்கை அபிவிருத்தி செய்வதும் அவ்வளவு முக்கியமானதே.

இவ்வாறு 'எதிர்க்கட்சித் தலைவர் மஹிந்த ராஜபக்ஷ யப்பானின் விசேட தூதுவர் யசுவி அகாஷிடம் தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில் அபிவிருத்திக்கான உதவிகள் அனைத்தையும், உதவி வழங்கும் நாடுகள் வடக்கிற்கே கொடுக்கப் போகின்றன என்றும், தெற்கு புறக்கணிக்கப்படப் போகின்றது என்றும் தென்னிலங்கை மக்கள் அபிப்பிராயம் கொள்வர். அவர்களின் அச்சத்தைப் போக்குவதே முக்கியமானதாகும் விடுதலைப் புலிகள் தமது படைப்பலத்தை அதிகரித்து வருவது பற்றி ஐ.தே.மு அரசாங்கம பாராமுகமாய் இருப்பதை பொ.ஐ.மு. எதிர்க்கின்றது என்று தன்னைச் சந்தித்த ஜப்பானின் விசேட தூதுவர் யசுஷி அகாஷியிடம் மகிந்த மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதியுடனான சந்திப்பை ஜனாதிபதி ரத்துச் செய்ததைத் தொடர்ந்து இந்தச் சந்திப்பு நடைபெற்றது குறிப்பிடத்தக்கது. (இ)

# ஞானவீர சனசமூக நிலையத் திறப்பு விழா

# சிறப்பு மலர் 19 - 01 - 2003

## தலைவரின் சிந்தனையிலிருந்து



எமது சனசமூக நிலையம் 22-07-1944ல் ஆரம்பிக்கப்பட்டு படிப்படியாக பல உயர்ச்சிகளைக்கண்டு, நூலக வசதியுடன் கூடிய அழகயமாடிக் கட்டிடமாக இன்று திறந்துவைக்கப்படு வதையிட்டு அங்கத்தவர்க ளுடன் சேர்ந்து நானும் பெரும கிழ்வடைகிறேன். இக்கட்டிட வேலைகளுக்காக நல்லூர் பிரதேச சபைத் தலைவர் திரு. மணிபல்லவராஜன் அவர்களும், யாழ்மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. மாவை சேனாதிராஜா அவர்களும் கணிசமான ஒதுக்கீடுகளைச் செய்து உதவியிருந்தனர். அத்துடன் நூலகத் தளபாட வசதிகளுக்காக திரு. கே.பி. கஜேந்திரகுமார் பா. உ. அவர்களும் ஒதுக்கீடு செய்து உதவியிருந்தார். நிதி ஒதுக்கீடுகள் செய்து உதவிய யாவருக்கும் இச்சந் தர்ப்பத்தில் நிலையம் சார்பாக நன்றியறிதலைத் தெரிவிப்பதில் பெருமகிழ்ச் சியடைகிறேன்.

குறிப்பிட்ட ஒதுக்கீடு களுடன் சேர்ந்து இளைஞர்க ளின் சிரமதானப் பணிகளும், வெளிநாடுகளிலுள்ள உறுப் பினர்களது நிதி உதவி களும், ஏனைய உறுப்பினர் களின் அயராத உழைப்பும் இன்றைய நிலைக்குக் காரணம் என்றால் மிகையா காது.

எமது முன்னைய கட்டிடம் தந்தை செல்வ நாயகம் பா.உ. அவர்களினால் 31-01-1972ல் திறந்து வைக்கப் பட்டது. இக்கட்டிடம் 1987ம் ஏற்பட்ட அனர்த்தங்களினால் முற்றாக சேதமடைந்தது. “நடப்பவை எல்லாலம் நன்மை க்கே” என எண்ணு வோமா னால் எமது நிலையக் கட்டிடம் அழிக்கப்பட்டதும் நன்மையே. அப்படியில்லாவிடில் இப்படியான ஒரு கட்டிடத்தை கிடைத்த காணி வசதிக்கேற்ப கட்ட சிந்தித்திருக்க வேமாட்டோம். எந்த ஒரு நிறுவனமும் திறமையாக செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு அமைவிடம், கட்டிடவசதிகள், சிறந்த நிர்வாகக் கட்டமைப்பு இன்றியமையாதனவாகும் எனவே மாணவர்களின் செயற்திறன், உறுப்பினர்களின் நலன், கிராமத்தின் பொதுவேலைத் திட்டங்கள் போன்ற செயற்பாடுகளை மேலும் முன்னேற்ற கரமாக செயற்படுத்த முடியுமென எண்ணுகிறோம். இதுவரை காலமும் எமது செயற்பாடுகளுக்கு ஒத்து ழைத்து ஊக்கமளித்த அனைவருக்கும் எமது மன மார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறோம்.

*க.ம. இராஜேந்திரன்,*
தலைவர்,
ஞான வீர சனசமூ நிலையம்
கோண்டாவில்.

## கொக்குவில் நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலய பிரதம குருவின் ஆசிச் செய்தி

“எம் கடன் பணிசெய்து கிடப்பதே” என்ற அப்பர் பெருமானின் வாக்கினை நினைவூட்டும் வகையில் சமூகப் பணியோடு சமயப்பணியினையும் ஆற்றிக் கொண்டிருக்கும் ஞான வீர சனசமூக நிலையம் தற்போது மீள் புனரமைப்புச் செய்யப்பட்டடு மெருகூட்டப்பட்ட நிலையில் அங்குரார்ப்பணம் செய்யப் படுவதையிட்டு மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறேன்.

ஞானவீர சனசமூக நிலையத்தினது பணி மென்மேலும் வளர்ச்சியடைந்து சமூகத்திற்கும் சமயத்திற்கும் பெரும் பணி ஆற்ற வேண்டுமென்று ஆசிமட அரசடி விநாயகனதும், நந்தாவின் கற்புலத்து மனோன்மணி அம்பாளினதும், செம்பாந்தோட்ட ஞான வைரவரினதும் திருவருளை வேண்டி ஆசிகூறியமர்கிறேன்.

“சர்வோ ஜனன சுகினோபவந்து
யோகா சமஸ்தா சுகினோபந்து”

*சிவஸ்ரீ ச. ஸ்ரீசந்தனக் குருக்கள்*




ஞானவீர சனசமூக நிலையத்தின் கம்பீரத்தோற்றம்!

## ஊரின் நடுவே ஒரு நன்நீர்ச்சுனை



கோண்டாவில் ஞானவீர சனசமூகநிலையம் ஊரின் நடுவே உள்ள நன்நீர்ச்சுனை போன்று வீதியால் போவோர் வருவோருக்கெல்லாம் இன்று பயன்பாடுள்ளதாக மிளிர் கின்றது. நிலையத்தின் பாரிய வளர்ச்சிக்கு அதன் அங்கத்தவர்களின் இடைவிடாத அர்ப்பணிப்புக்களும், தியாக சிந்த னையும் செயற்பாடுகளுமே காரணமாகும். தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்தில் பற்றும் உறுதியும் மிக்க தொண்டர்கள் பலர் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை நிலையத்தில் இருக்கிறார்கள். அனைவரும் தந்தை செல்வாவின் அரசியல் சித்தாந்தங்களில் விசுவாசகம் உடையவர்கள். தமிழ் மக்களது உரிமைப் போராட்டங்களில் பங்குபற்றுபவர் கள், எனது நோக்கில் ஞான வீர சனசமூக நிலையம் வெறுமனே ஒரு படிப்பகம் அல்ல. அது கிராம மக்களதும், தமிழ் மக்களதும் மேம்பாடுகளில் பல நோக்குகளைக் கொண்டதோர் சிறந்த அமைப்பாகும்.

*செல்லப்பா நடராசா*
(பாராளுமன்ற முன்னை நாள்
சிரேஷ்ட றன்சாட் அறிக்கையாளர்,
தினகரன் அலுவலக மூத்த பத்திரிகையாளர்)



அனர்த்தத்தினால் அழிந்த
ஞானவீர சனசமூக நிலைக் கட்டிடம்

## ஞானவீர சனசமூக நிலைய நூலகமேவாழி!



தந்தை செல்வா நாமந் துலங்க
தமிழ் நிலத்தில் நிமிர்ந்த நூலகமே!
சிந்தை யிலிருத்தி உன்னை வணங்குகிறேன்
செந்தமிழர் தேசம் செழிக்க தொண்டாற்று
வந்தனைக்குரிய செல்வாவின் வழிகாட்டல் தொடரட்டும்
வரலாறு உன்னாலும் தமிழர் படைக்கட்டும்
விந்தைமிகு ஞானவீர சனசமூக நிலைய புகழ் ஓங்கட்டும்
வியனுலகில் ஆயிரம் பணி காத்து வாழியவே!

*கவிமாமணி மதுரகவி*
*காரை. எம்.ரி அருளானந்தன்*

## நிலையத்தை வாழ்த்துவோர்


போட்டோ செலெக்ற்
நெட்டிலிப்பாய், கோண்டாவில்.

ஸ்ரீ கிருஷ்ணா கல்வி நிலையம்
மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரி.

விஜியன் புக் பைண்டிங் சென்ரர்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

வாகி பார்மசி
பலாலி வீதி, கோண்டாவில்.

தில்லயம்பதி மோட்டோர்ஸ் அன் தொலைத் தொடர்பு சேவை
புகையிரதநிலைய வீதி, கோண்டாவில்.

ஸ்ரீ சரவணாஸ் விற்பனை நிலையம்
இல:10. கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.

கோபிகா டெக்ஸ்
இல: 5/4(3A) நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

ராஜா களஞ்சியம்
உப்புமடம் சந்தி, கோண்டாவில் மேற்கு.

K.T.C. கல்வி நிலையம்
ஸ்ரேசன்றோட், கோண்டாவில்.

முத்தொளி வீடியோ
தில்லையம்பதி, கோண்டாவில்.

பிரவீன் தொலைத் தொடர்பகம்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

மதுஷா வைண்டிங் வேக் சொப்
இருபாலை றோட், கோண்டாவில்.

வவி வெல்டிங் வேக்சொப்
இருபாலை விதி கோண்டாவில்

மகேந்திரம் ஸ்ரோர்ஸ்
இருபாலை றோட், கோண்டாவில்.

அஜய் தையலகம்
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்

ஒக்ஸன் வீடியோ கொம்பிளக்ஸ்
கே.கே.எஸ். றோட், தாவடிச் சந்தி.

சுந்தர்சன
மத்திய சந்தை, மானிப்பாய்.

சுதர்சன் வீடியோ
ஸ்ரேசன் றோட், கோண்டாவில்.

சாந்தா மோட்டேர்ஸ்
61, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

பெஷன்கவுஸ்
கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.

சோதி ஸ்ரோர்ஸ்
இருபாலை வீதி, கோண்டாவில்.

# தமிழர் தாயகத்தில் இருந்து அந்நியப்படைகள் அகலவேண்டும்

## வண.பிதா இம்மானுவேல் அடிகள் பொங்குதமிழ் நிகழ்வில் அறைகூவல்

(தென்மராட்சி)

**நாங்கள் தொடர்ந்தும் எங்களது பக்கத்திலே நின்று இந்த மண்ணில் தமிழர்கள் தமிழர்களாக மனிதர்களுக்கு உரிய உரிமைகளுடன் வாழ விடுங்கள் என்ற சத்தம் உலகெங்கும் ஒலிக்கச் செய்ய வேண்டும். இரத்தம் தோய்ந்த இந்தப் புண்ணிய அன்னைத்தமிழ்ப் பூமியில் இருந்து அந்நியப்படைகள் வெளியேறத்தான் வேண்டும்.**



வண.பிதா எஸ்.ஜி இம்மானு வேல்அடிகள் யாழ்ப்பாணப் பல்க லைக்கழக கைலாசபதி கலைய ரங்கில் நேற்று முன்தினம் நடை பெற்ற இரண்டாமாண்டு பொங்கு தமிழ் எழுச்சி நினைவு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ்பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தலைவர் க. பரணிதரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ் வில, வண.பிதா இம்மானுவேல் அடிகள் தொடர்ந்தும் உரையாற் றும் போது,

எமது மண். எமது சொந்த மண் நாம் வாழும் மண்ணாக இது மாறும் வரை நாங்கள் மௌனமாக இருக்க முடியாது. எமது இலட்சியம் தெளிவாகிவிட்டது. தேசியம் ஒன்றாகி விட்டது. வழியும் ஒன்றாகி விட்டது. எங்கள் தலைமைத்துவ மும் ஒன்றாகி இருக்கின்றது.

தமிழர்களாகிய நாங்களோ எங் களை வாழ விடுங்கள்-நாங்கள் வாழ்வதற்கான காற்றைச் சுவாசிக்க சொந்த மண்ணிலே வாழ விடுங் கள் என்ற அடிப்படையான உரிமை யைத்தான் கேட்கின்றோம். எங்களது இலட்சியத்தில் தெளிவு வேண்டும். உறுதி வேண்டும். அரசியல் தலைமைக்கு மக்கள் தான் எப்பொ ழுதும் உந்து சக்தி கொடுத்துக் கொண்டிருக்க வேண்டும். உங்களு டைய பொங்கு தமிழ் விழா ஒரு இன்றியமையாத விழாவாக இருக் கின்றது.

மனிதர்கள் தமது சொந்த இடத் திலே வாழ வேண்டியது அடிப்படை உரிமை.இருந்தும் அந்நியப்பட்டா ளம் தனக்கு ஒரு இடம் வேண்டும் என்று சொல்கின்றது. நாங்கள் கேட்பது அடிப்படை உரிமை. எங்கள் மக்களின் உரிமைகளை ஒரு விதத் தாலும் மறுக்க முடியாது. அது இறைவன் கொடுத்த உரிமை யாகும். அந்நியப்படை ஒன்று வீட்டுக் குள்ளே குடியேறி- நான் வெளியேறு வதாயிருந்தால் அந்த நிபந்தனை- இந்த நிபந்தனை என்று சொல்லி விலை பேசுகிறார்கள்.இது பேசக் கூடிய விடயமல்ல. நீ ஏன் புகுந் தாய்? எப்போது தான் வெளியேறு கிறாய் என்றுதான் கேட்க வேண் டும். நீ இங்கே எமது மண்ணை ஆக்கிரமித்து இருப்பதற்கு உரிமையே இல்லை.

எமது நிலம் எமக்கு வேண்டும், இந்தக் குரல் எங்கும் ஒலிக்க வேண்டும். எங்கள் இலட்சியத்தில் முக்கிய விடயங்கள் தான் தங்கி யுள்ளன. விடுதலை ஒலி எங்கும் கேட்கவேண்டும் .எங்கும் பரவ வேண்டும் எனக்குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நுண் கலைப்பீட சிரேஷ்ட விரிவுரையாளர் ம. சிதம்பரநாதன் அங்கு உரையாற் றும் போது,

மற்றவர்களை அடக்குவதோ அல்லது மற்றவர்களுடையதைப் பறிப்பதோ எமது விருப்பம் அல்ல. நாங்கள் தற் காப்பில் வாழ விரும்புகிறோம். இது பற்றி நாம் மிகத்தெளிவாக இருக் கிறோம். ஆக்கிரமிப்பு சின்னமாகிய இராணுவம் இங்கு இருக்க முடியாது.

இந்த இராணுவத்தின் சப்பாத் தின் ஒரு நூல் கூட இந்த நிலத்திலே கிடக்க முடியாது. ஈழநாடு எமது நாடு. எங்களது அழகியதேசம். எமது அழகிய தேசத்தை -மண்ணை நாம் காதலிக்கின்றோம். இந்த நிலம் புனிதப்படவேண்டும் .எமது ஈழ நாட்டை நாம் நேசிக்கின்றோம் எனக்குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் வவுனியா, மன்னார், திருகோணமலை, வன்னி மாவட் டங்களில் இருந்து வந்த பிரதிநிதி களும் உரையாற்றினர். (உ-77)

## சமஷ்டி குறித்து ஆராயச் சென்ற குழு பெல்ஜியத்தில்

(கொழும்பு)

பெல்ஜியத்தின் 30 வருடகால சமஷ்டி ஆட்சி முறை குறித்து இலங்கையில் இருந்து சென்ற குழு வினர் ஆராயந்துள்ளனர்.

நாட்டில் சமஷ்டி ஆட்சி முறை யினைக் கொண்டு வருவது தொடர் பில்,சமஷ்டி ஆட்சிமுறை நிலவும் நாடுகளில் அவ்வாட்சி முறை குறித்து ஆராய்வதற்கென இலங்கையில் இருந்து கடந்த 15ஆம் திகதி ஆளும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் குழுவொன்று புறப்பட்டமை தெரிந்ததே.

இக்குழுவினர் பெல்ஜியம் நாட்டு சமஷ்டி ஆட்சிமுறை குறித்து அங்கு மாநாடு ஒன்றை நடத்தியுள்ள னர்.

பெல்ஜியத்தில் இவ்ஆட்சி முறை மூலம் எவ்விதமான சிக்கல்களும், பிரச்சினைகளும் தோன்றவில்லை. என இம்மாநாட்டின் மூலம் அறியக் கூடியதாக இருந்ததாக தூதுக் குழுவின் ஒருங்கிணைப்பாளர் அமைச்சர் ஜயலத் ஜெயவர்த்தன தெரிவித்துள்ளார்.

சிறிய நாடாக பெல்ஜியம் இருந்த போதிலும் சமஷ்டி ஆட்சிமுறை சிறந்த முறையில் நடைமுறைப்படுத் தப்படுவது குறித்து அந்நாட்டுப்பிரதி நிதிகளால் தூதுக்குழுவுக்கு விளக் கம் அளிக்கப்பட்டது. (உ-8)








நேற்று முன்தினம் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெற்ற பொங்குதமிழ் எழுச்சி நிகழ்வின் இரண்டாம் ஆண்டு நிகழ்வுக்காட்சிகள்

## பெரும்பான்மைப் பலமுள்ள பிரதமரைப் பதவி விலக்குவது ஜனநாயக முரண்

## ஜனாதிபதியின் அறிவிப்புக்கு பீரிஸ் பதில்

(கொழும்பு)



ஒருகடிதத்ததை எழுதி அனுப்பி வைப்பதன் மூலம் பிரதமரைப் பதவியிலிருந்து அகற்றி விடுவேன் என்ற ஜனாதிபதியின் கூற்றை அரசாங் கம் பாரதூரமான விடயமாகக் கருதவில்லை. அரசாங்கத்திற்கு போதிய பெரும்பான்மை இருக் கிறது என்று அமைச்சர் ஜீ.எல் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

நாட்டின் பாதுகாப்புக்கு அச்சுறுத் தலாக ரணில் விக்கிரமசிங்க தொடர்ந்தும் செயற்படுவாராயின் நான் அவரைப் பதவியிலிருந்து அகற்றி விடுவேன் என்று ஜனாதி பதி செவ்வாயன்று தெரிவித்தமை குறித்து கருத்து வெளியிட்ட பீரிஸ்,

''இது ஒரு ஜனநாயக நாடு, எவருக்கும் எதையும் கூறும் சுதந் திரம் இருக்கிறது. பெரும்பான் மைப்பலமுள்ள பிரதமரைப்பதவி விலக்குவது ஜனநாயகத்திற்கு முர ணானது'' என்று தெரிவித்தார்.

அரசியல் நெருக்கடி உருவாகி னால் சமாதானப் பேச்சுக்கள் பாதிக்கப்படலாம், பிரதமருக்கும், ஜனா திபதிக்குமிடையே எழக்கூடிய பூச லைப் புலிகள் சமாதானத்திற்கு எதி ரான விடயமாகக்கருதுகின்றனர். திருமதி குமாரதுங்காவின் கருத் துக்கள் பதில் கூறுவதற்குப் பெறுமதி யானவையல்ல என்று பிரதமரின் அலுவலகப் பேச்சாளர் இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ளார்.

புலிகளின் ஒவ்வொரு கோரிக் கையையும் பிரதமர் ஏற்றுச் செயற் படுத்துகிறார். நாட்டைப்பிரித்து புலி



களுக்கு ஒரு தனிநாட்டை வழங்கு வதற்கு ஒத்தாசை புரிகிறார் என்று ஜனாதிபதி பிரதமர் மீது குற்றம் சாட்டிவருவதுடன்,1998 இல் விதிக் கப்பட்ட தடையை நீக்கியதுடன், தனது அங்கீகாரமின்றி சமாதான நடைமுறைகளில் ஈடுபட்டு வருகிறார் என்று குறைகூறி வருவதும் குறிப்பிடத்தக்கது.(உ)

## ரெலிக்கொம் நிறுவன தனியுரிமை நீக்கப்படும்

### இம்தியாஸ் தெரிவிப்பு

(கொழும்பு)

வெளிநாட்டு அழைப்புக்கள் மற்றும் தொலைபேசி இணைப் புக்கள் தொடர்பாக ஸ்ரீலங்கா ரெலிகொம் நிறுவனத்திற்கு வழங்கப் பட்டுள்ள தனியுரிமை எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் இருந்து நீக்கப்படும்.

இவ்வாறு ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் 'கருத்து வெளியிடுகையில்,

கிராமப் பிரதேசங்களிற்கு தொலை பேசி சேவைகளை விஸ்தரிக்கும் நோக்கில் வேறு நிறுவனங்களுக் கும் உரிமைகளைப் பெற்றுக் கொடுக் கும் வகையில் தொலை பேசிச் சேவைச்சட்டம் இவ்வாறு மாற்றி அமைக்கப்பட்டுள்ளது.


கிராமப்புறங்களுக்கு தொலை பேசிச் சேவைகளை வழங்கும் நிறுவனங்களுக்கும் சலுகைக்களைப் பெற்றுக் கொடுக்கவும் திட்டமிட்டுள்ளது எனஅமைச்சர் கூறியுள்ளார்.(உ-10)

## இலவச பண்டிதர் வகுப்பு

(யாழ்ப்பாணம்)

பிரவேச பண்டிதர்,பாலபண்டிதர் வகுப்புக்கள் பிரதி சனி,ஞாயிறு தினங்களில் காலை 9 மணி முதல் பி.ப 2மணி வரை இலக்கம் 223, காங்கேசன்துறை வீதியில் அமைந் துள்ள கீழைத் தேசக்கல்வியியல் கல்லூரியில் இலவசமாக நடை பெற்று வருகின்றன.

ஆரிய,திராவிட பாஷா அபி விருத்திச் சங்கத்தினால் நடத்தப்படும் இவ்வகுப்புக்களில் தமிழ், இலக் கண, இலக்கியம், சமஸ்கிருதம், ஆங்கிலம், .யாப்பிலக்கணம் போன்ற பாடங்களைத் துறை போந்தவர்கள் போதித்து வருகின்றனர். (உ)



இலங்கைப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ்ப்பாணப்பிரிவு பிரதிநிதிகள் இருவர் வலம்புரி' பணிமனைக்கு விஜயம் செய்து கலந்து ரையாடுகையில் எடுக்கப்பட்ட படம்.

★ தீய சக்திகளின் கை மேலோங்கினும்

# சமாதானப் பாதையில் அரசு தொடர்ந்தும் பயணிக்கவேண்டும்

## இடதுசாரி முன்னணித் தலைவர் வாசுதேவ நாணயக்கார கருத்து

(கொழும்பு)

**தீய சக்திகளின் எதிர்ப்புகள் அதிகரித்துவருகின்றபோதிலும் சமாதான நடவடிக்கைகளை இலங்கைஅரசாங்கம்தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவர் வாசுதேவ நாணயக்கார நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.**

நேற்றுக்காலைகொழும்பில் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட நிகழ்ச்சி ஒன்றில் கலந்து கொண்டு பேசுகையிலேயே இதனைத் தெரிவித்தார்.

அவர் ஆங்கு தொடர்ந்தும் பேசுகையில் ஒரு சில குழுக்களே சமாதான நடவடிக்கைகளுக்கு எதிர்ப்புத்தெரிவித்து வருகின்றது. அத்துடன் சமாதான நடவடிக்கைகளுக்கு ஆக்க பூர்வமற்ற அபிப்பிராயங்களையே இக்குழுக்கள் தொடர்ந்தும் வெளியிட்டு வருகின்றன.

இத்தகைய நம்பிக்கையற்ற குழுக்களின் பிரசார நடவடிக்கையினால் மக்கள் தப்பான வழியில் இட்டுச் செல்லப்படக் கூடாது என்றார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் தயான் ஜயதிலக்க உரையாற்றுகையில்;

சமாதானப் பேச்சு வார்த்தைகளின் போது அபரிதமான நன்மைகளை தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு அரசாங்கம் வழங்கியுள்ளது.

அந்த வகையில், இடம்பெயர்ந்தவர்கள் மீளக் குடியமர்த்துவது சம்பந்தமாக இலங்கை அரசு வெளியிட்டுள்ள உடன்பாடு தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு கிடைத்த வெற்றி ஆகும் என்றார்.

இதற்கு பதிலளிக்கும் வகையில் கருத்துக்கூறிய இடதுசாரி முன்னணித்தலைவர் வாசுதேவ நாணயக்கார,

மனித சமுதாயம் சம்பந்தமான இரக்க உணர்வைக் கொண்டுள்ள எவரும் இடம்பெயர்ந்த மக்கள், தமது சொந்த இடங்களில் மீளக்குடியமர எதிர்ப்பு தெரிவிக்க மாட்டார்கள் என்றார்.

அதேவேளை, இலங்கை அரசு, தற்போது மேற் கொண்டுவரும் சமாதான நடவடிக்கைகளில் இருந்து விலகிப் போகுமானால் மீண்டும் ஒரு யுத்தம் ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

இத்தகைய சூழ்நிலையில் இனப் பிரச்சினைக்கு பேச்சுவார்த்தையின் மூலம் தீர்வு காணவென அரசு சமாதான நடவடிக்கைகளை துணிவுடன் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லவேண்டும் என்றார்.

(உ-10)

மனித உரிமை ஆணைக் குழுவின்

## செயற்திட்டங்களைவிளக்கி தினசரி நாட்காட்டி

(கொழும்பு)

இலங்கை மனித உரிமை ஆணைக்குழு ஐரோப்பிய ஆணைக்குழுவுடன் இணைந்து செயற்படுத்தவுள்ள தமது திட்டங்களை விளக்கு முகமாக தினசரி நாட்காட்டி ஒன்றினை வெளியிட்டுள்ளது.

சமாதானப்பேச்சுவார்த்தைகளில் சகல சிறுபான்மை மக்களுக்குமான உரிமை, பெண்களுக்கான உரிமை மற்றும் சிறுவர், முதியோருக்கான உரிமை என்பன இதில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இதில் தென்னாபிரிக்கா முன்னாள் ஜனாதிபதி நெல்சன் மண்டேலா, ஐ.நா செயலாளர் கொபி அனான், மேரி ரொபின்சன், டி எஸ் சேனாநாயக்கா, எஸ். டபிள்யூ. ஆர் டி.பண்டாரநாயக்கா ஆகியோரின் வாசகங்கள் இடம் பெற்றுள்ளன.

(உ-3)

## கபடிப் போட்டி

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான விளையாட்டுப் போட்டி இன்று காலை 9.00 மணிக்கு ஊர்காவற்றுறை பொது மைதானத்தில் ஆரம்பமாகவுள்ளது.

இன்றைய தினம் கபடிப் போட்டி இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-75)

# இலங்கையில் மேற்கொள்ளப்படும் சமாதான நடவடிக்கைகளுக்கு உதவ அமெரிக்கா தயார்

## வெளிவிவகார அமைச்சர் கொலின்பவல் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையில் மேற்கொள்ளப்பட்டு வரும் சமாதான நடவடிக்கைகளுக்கு உதவத் தயாராக உள்ளதுடன் இலங்கையில் நடைபெறவிருக்கும் அபிவிருத்தி நடவடிக்கைகளை அமெரிக்கா உன்னிப்பாக அவதானித்து வரும் என அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் கொலின் பவல் தெரிவித்துள்ளார்.

நேற்று முன் தினம் இடம்பெற்ற அமெரிக்காவிற்கான இலங்கையின்புதிய தூதுவரின் நியமனப் பத்திரத்தைக் கையளிக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு பேசுகையில் இதனைத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் தூதரக அலுவலகங்களுக்குப்பொறுப்பான தூதுவர் ஜே வீ ஏவிஜயவர்த்தனாவும்கலந்துகொண்டார்.

புதிய தூதுவரான டெமின் ஆர் சுபசிங்காவை வரவேற்ற அமெரிக்க வெளிவிவகார அமைச்சர் அமெரிக்காவிற்கு புதியவர் அல்லர் என்றும் இலங்கைத்தூதுவர் என்ற நிலையில் அவரது செயற்பாடுகள் அனைத்திற்கும் வெற்றி கிடைக்க வேண்டும் என வாழ்த்தியகொலின்பவல்அமெரிக்காவைப் பற்றி அவர்நன்கு அறிந்து இருப்பதால் இருநாடுகளுக்கும் இடையிலான உறவுகள் பலமடையும் என்றும் நம்பிக்கை வெளியிட்டார்.

இந்நிகழ்வில்கலந்துகொண்டு உரையாற்றிய புதிய தூதுவர் சுபசிங்க இலங்கைக்கும் அமெரிக்காவிற்கும் இடையிலான உறவுகளை மேலும் பலப்படுத்த அர்ப்பணிப்புடன் செயற்படப்போவதாக தெரிவித்தார்.

அத்துடன் இலங்கையின் சமாதான நடவடிக்கைகளுக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் அமெரிக்கா அளித்து வரும் ஆதரவிற்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ள நன்றியையும் புதிய தூதுவர் எடுத்துக் கூறினார்.

உயர்கல்வி பயின்று 25 வருடங்களாக அமெரிக்காவில் சேவையாற்றியதுடன் அத்தகைய நாட்டில் தூதுவராக பணியாற்றுவதையிட்டு நான் மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன் என்றும் புதிய தூதுவர் தெரிவித்தார்.

இதேவேளை, இங்கு கையளிக்கப்பட்டுள்ள புதிய தூதுவரிற்கான நியமனக் கடிதத்தினை அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ்சிடம் சம்பிரதாய பூர்வமாக வெள்ளை மாளிகையில் நடைபெறவுள்ள வைபவத்தின் போது ஒப்படைப்பார் என தெரிவிக்கப்படுகிறது.

(உ-10)

## பாலஸ்தாபனம்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் வாரிவளவு கற்பக விநாயகர் ஆலய பாலஸ்தாபன கும்பாபிஷேகம் இன்று நடைபெறவுள்ளது.

(உ-3)

## மட்டம் 2 இறுதிப் பரீட்சை

(கல்வியங்காடு)

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ். பிராந்திய நிலையத்தில் எந்திரவியல் டிப்ளோமா மட்டம் இரண்டின் இறுதிப் பரீட்சை எதிர் வரும் 21, 23, 24, 25 ஆம் திகதிகளில் இடம்பெறவிருப்பதாக யாழ். பிராந்திய நிலைய இயக்குநர் ச. ஆ. ஞானேந்திரன் தெரிவித்துள்ளார்.

(உ-54)

## நாட்டைப் பாதுகாக்கும் சங்கமுதலாவது அலுவலகம் மருதானையில் திறப்பு

(கொழும்பு)

நாட்டைப் பாதுகாக்கும் சங்கத்தின் முதலாவது அலுவலகம் கடந்த புதன்கிழமை மருதானையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

வண. எல்லே குணவாங்ஸ தேரர். தலைமையில் நடைபெற்ற இவ் வைபவத்தில் முன்னாள் பிரதமர் ரட்ணஸ்ரீ விக்கிரம நாயக்க, எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ, மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்தன மற்றும் எம். பிக்களான நிலன் குமாரதுங்க, பண்டித் பண்டாரநாயக்க, பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர ஆகியோர் உட்பட பல உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

(உ-3)

## சகல ஆதிபர்களுக்கும் கட்டாய இடமாற்றம்

(மாத்தளை)

மாத்தளை மாவட்ட தமிழ் சிங்கள, முஸ்லிம் பாடசாலைகளில் தொடர்ந்து 5 வருடங்களுக்கு மேலாக கடமையாற்றி வரும் சகல அதிபர்களும் அடுத்த மாத இறுதிக்குள் கட்டாய இடமாற்றம் செய்யப்படவேண்டும் என்று உள்ளூராட்சி மாகாணசபை அமைச்சர் அலுக்அலுவிகார மத்தியமாகாணகல்வி அமைச்சின் செயலாளர் டிஜித்த பண்டார ஏகநாயக்காவிற்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சில அதிபர்கள் 1977ஆண்டு தொடக்கம் இன்றுவரை ஒரே பாடசாலையில்கடமையாற்றி வருகின்றனர்.

இது கஷ்டப் பிரதேச பாடசாலைகளிலும் இடம்பெறுகிறது.

எனவே, 5 வருடத்திற்கு மேல் ஒரே பாடசாலையில் கடமையாற்றி வரும் சகல அதிபர்களும் கட்டாயம் இடமாற்றம் செய்யப் படவேண்டும் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

(உ-10)

## சமுர்த்தி வங்கிகளுக்கு நிரந்தர கட்டடம் அமைக்க நடவடிக்கை

(சண்டிலிப்பாய்)

யாழ் மாவட்டத்தில்இயங்கவுள்ள அனைத்துச் சமுர்த்தி வங்கிகளுக்கும் நிரந்தரக் கட்டடம் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப் பட்டிருக்கும் சமுர்த்தித்திட்ட நடவடிக்கைகளில் ஒன்றான சமுர்த்தி வங்கிகள் இயங்குவதற்கான இடம் இன்மை பெரும் பிரச்சினையாக உள்ளது.

இதனைக் கருத்தில் கொண்டே சமுர்த்தி அதிகாரசபை இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

இந்த வகையில் சமுர்த்தி அதிகாரசபை சமுர்த்தி முகாமையாளர்களுக்கு வங்கியின் வரைபடம் மற்றும் ஒதுக்கீட்டுத் தொகை என்பவற்றை அனுப்பிவைத்துள்ளது.

இவ் ஒதுக்கீட்டின் படி வங்கிக்கட்டடத்திற்கு ஏறக்குறைய 10 இலட்சம் ரூபா வரையும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன் மேலதிக செலவினை மக்களின் பங்களிப்புடன் மேற்கொள்ளும்படி கூறப்பட்டுள்ளது

அதற்கான காணி அரச காணியாகவோ அல்லது நன்கொடையாகவோ இருக்கலாம் எனவும்,

அடுத்த மாத நடுப்பகுதிக்குள் கட்டடத்திற்கான நிதி விடுக்கப்படும் எனவும் தெரிவித்து பூர்வாங்க ஏற்பாடுகள் உடன் ஆரம்பிக்குமாறு சமுர்த்தி முகாமையாளர்கள் பணிக்கப்பட்டுள்ளனர்.

(உ-258)

# பதஞ்சலியார் காணப் பரமன் நடனமாடிய

# பல சிறப்புக்கள் வாய்ந்த தைப்பூசத் திருநாள்

## இன்று தைப்பூசம்

இன்று தைப்பூசத் திருநாளாகும். பண்டைக் காலம் தொடங்கி இந்து மக்கள் கடைப்பிடித்து வரும் புண்ணிய தினங்களில் ஆழ்ந்த அர்த்தமுள்ள கருத்துக்கள் புதைந்துள்ளன. இந்த வகையில் ''தைப்பூச'' ஒரு சுப தினமாகும். இந்த நல்ல நாளில் எந்தவொரு சுப காரியத்தையும் செய்யலாம்.

இருபத்தொரு நட்சத்திரங்களுள பூசம் எட்டாவதாகும் தை மாதத்தில் பூச நட்சத்திரம் வரும் நாள் அநேகமாக நிறைமதி நாளாக இருக்கும் இதனைப் புண்ணிய நாளாக இந்துக்கள் கொண்டாடுவர்.

### புதிது எடுத்தல்

தேவர்களின் குருவாகிய பிரகஸ்பதியை பூச நட்சத்திரத்தின் தேவதை என்பர்கள். பிரகஸ்பதியை அறிவின் தேவதை என இந்துக்கள் நம்புவதால் பூச நட்சத்திரத்தை வணங்கினால் பிரகஸ்பதியின் அருள் கிடைக்கும் என்பார்கள்

தைப் பூச நன்னாளில் புண்ணிய நதியில் நீராடினால் அதிக புண்ணியம் கிடைக்கும்.

தைப்பூசத் திரு நாளில் புதிதாய் விளைந்த தானியக் கதிர்களை உழவர்கள் வீட்டிற்கு எடுத்து வருவார்கள் இது ''புதிது எடுத்தல்'' எனப்படும் வீட்டில் சேர்ந்த நெல் மணிகளை தெய்வ விழாக்களுக்கு அர்ப்பணித்து மகிழ்ந்து நன்றியுடன் வணங்குவார்கள் மற்றும் தம்முடன் சேர்ந்து பாடுபட்ட இனத்தவர்கள், நண்பர்கள் எல்லோருக்கும் கொடுத்து மகிழ்வார்கள்.

### சிறப்புரைத்தல்

தைப்பூசம் பதஞ்சலியும் வியாக்கிரமபாதரும் காண இறைவன் இன்பத் திருநடனம் ஆடிய நாளாகவும் விளங்குகிறது இதனை மணிவாசகர், 'பதஞ்சலிக்கு அருளிய பரம நாடகம்' என்று கூறியுள்ளார்: தஞ்சாவூர் மாவட்டத்திலுள்ள, 'திருவிடை மருதூர்' இத் தைப்பூச விழாவிற்குச் சிறந்த தலமாகும்;

தைப்பூசத்தின் சிறப்பை உணர்த்தும் வகையில் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்.

'தைப்பூச மொண்கண் மடநல்லார் மாமயிலைத்
தைப்பூச நீற்றான் கபாலீச்சரமமர்ந்தான்
நெய்ப்பூச மொண்புழுக்கல்
நேரிழையார் கொண்டாடும்
தைப்பூசங்காணாதே போதியோ பூம்பாவாய்' என்று பாடினார்.

### முருகன் ஆலயங்களில்

தைப்பூச நன்னாளில் முருகனுக்குரிய சிறப்புத் திருநாளாகவும் விழா எடுக்கப்படுகிறது. தமிழகத்தின் குமரக் கடவுளின் திருத்தலங்களான ஆறு படை வீடுகள் அமைந்த திருக்கோயில்களில் தைப்பூசத் திருவிழா பக்தி மணம் கமழக் கொண்டாடப்படுவதுண்டு; திருச்செந்தூர், பழனி, திருப்பரங்குன்றம் உட்பட்ட விசேட ஆலயங்களில் இன்று தேர்த் திருவிழாக்களும் விஷேட பூசை வழிபாடுகளும் நடைபெறும்

தந்தைக்கு உபதேசித்த ஞானக்குமரனின் சிறப்பு உடைத் திருவிழா நடைபெறும் அத்துடன் தீட்சை கொடுக்கும் நிகழ்வு மற்றும் குழந்தைகளுக்கு ஏடு தொடக்கி வித்தியாரம்பம் செய்து வைக்கும் நிகழ்வுகளும் இடம் பெறும்' இவ்வாறு தைப்பூசத் திருநாள் பல அம்சங்களிலும் அருள் நல்கும் நாளாகும்.

சமூகஜோதி
**கா. கணேசதாசன்**

## முக்கூட்டு மா விநியோகத்தில் முரண்பாடு!

(துன்னாலை)

துன்னாலைப் பகுதியைச் சேர்ந்த போஷாக்குக் குறைந்த குழந்தைகள் தாய்மார்களுக்கான திரிபோஷா மா விநியோகத்தில் ஒழுங்கீனம் நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பகுதி மக்களுக்கான திரிபோஷா மா விநியோகம் கோவிற்சந்தை சனசமூக நிலையத்தில் இடம் பெற்று வருகின்றது.

இவ் விநியோகத்தில் சீரான ஒழுங்கு முறைகள் கடைப்பிடிக்கப்படாமையால் கருத்து முரண்பாடுகளும் வாய்த்தர்க்கங்களும் ஏற்படுவதாக கூறப்படுகிறது. (உ-4)

## மந்திரிமனை புனரமைப்பு

(கல்வியங்காடு)

நாலரை இலட்ச ரூபா செலவில் சங்கிலி மன்னர் காலத்து நல்லூர் மந்திரிமனை புனரமைக்கப்பட்டு வருகின்றது.

இந்த வகையில் மந்திரி மனையின் சுற்றுப் புறம் சிரமதானம் மூலம் துப்புரவு செய்யப்பட்டிருப்பதுடன், ஜமுனா ஏரியும் புனரமைக்கப்படவுள்ளது. (உ-54)

# மு.கா.தலைமைத்துவம் மேலுள்ள மக்கள் நம்பிக்கை குறையவில்லை

## அமைச்சர் ஹக்கீம் கூறுகிறார்

(கொழும்பு)

சில தீயசக்திகளின் நடவடிக்கைகள், சமாதானப் பேச்சுக்களில் தனித்துவமாக முஸ்லிம் சமூகம் பங்குபற்றும் வாய்ப்புக்களை குறைத்து வருவதாக ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீம் குற்றம் சாட்டியுள்ளார்.

நேற்று முன்தினம் சிகாரியாவில் நடைபெற்ற கட்சி அங்கத்தவர்களுக்கான கூட்டம் ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்து உரையாற்றுகையில், முஸ்லிம் மக்களை ஐக்கியப்படுத்தி சகல இனங்களுடனும் பரஸ்பர புரிந்துணர்வுடன் நடப்பதே எமது கட்சியின் நோக்கம் ஆகும்.

சில சக்திகள் கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவம் குறித்து மக்களுக்கு பிழையான அபிப்பிராயங்களை வழங்கி வருகின்றன.

ஆயினும் மக்களுக்கு முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைமைத்துவத்தில் உள்ள நம்பிக்கை மேலும் வலுப்பட்டு வருகிறது.

எனவே இத் தீயசக்திகளின் நடவடிக்கைகளை ஒழிப்பதற்கு அனைத்து முஸ்லிம் மக்களும் ஒன்றுபட்டு எமது அமைப்பின் செயற்பாடுகளுக்கு ஆதரவு அளிக்கவேண்டும் என்றார். (உ-10)

## டிப்ளோமா கற்கைநெறி நடத்த கோரிக்கை

(கல்வியங்காடு)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தினால் நடத்தப்படும் மேற்கல்வி டிப்ளோமா கற்கை நெறியினை யாழ். பிராந்திய நிலையத்திலும் நடத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (உ)

## கருத்தரங்கு இன்றைய நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் நடைபெற்றுவரும் சமஷ்டி மயப்படுத்தலில் சந்தர்ப்பங்களும் சவால்களும் என்ற தலைப்பிலான கருத்தரங்கின் இறுதி நாளான இன்றைய நிகழ்ச்சிகள் காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன.

பிரட்ரிக் ஈபேட் நிறுவனமும் மகளிர் அபிவிருத்தி நிலையமும் இணைந்து இக்கருத்தரங்கினை ஒழுங்கு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது

இன்றைய நிகழ்ச்சிகள் கலாநிதி டட்மார் கினெஸ்ட்ஷெல் தலைமையில் ஆய்வமர்வாக நடைபெறும். பி. பி. தேவராஜ், வி. பி. தமிழ்மாறன், ரோகான் எதிரிசிங்க, ஏ. ஜே. அருட்பிரகாசம், வி. சேந்தன் ஆகியவர்கள் ஆய்வாளர்களாகக் கலந்து கொள்ளவுள்ளனர்.

மு.ப. 11.30 மணிக்கு ஆரம்பமாகும் கருத்தரங்கிற்கு பி.பி. தேவராஜ் தலைமை வகிப்பார். சமஷ்டியும் அதிகாரப் பகிர்வும், நிதி சவால்களும் என்ற தலைப்பின் பேராதெனிய பல்கலைக்கழகத்தின் கலைப் பிரிவைச் சேர்ந்த கலாநிதி சிமனசிறிலியனே உரையாற்றவுள்ளார்.

கருத்தரங்கின் பெறுபேறுகள் பற்றிய கருத்துரைகளை பி. பி. தேவராஜ், யாழ். கத்தோலிக் திருச்சபையைச் சேர்ந்த நீதிக்கும் அமைதிக்குமான ஆணையத்தின் தலைவர் பிதா. ஏ. ஐ. பேர்னாட்டும் வழங்குவர். (பி)

## நன்கொடை பெறலாம்

(ஊர்காவற்றுறை)

ஊர்காவற்றுறைப் பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சனசமூக நிலையங்களுக்கான 2002ஆம் ஆண்டுக்கான நன்கொடைகள் வழங்கப்படுகின்றன.

சனசமூக நிலையத்தின் நிர்வாகத்தினர் தங்களுக்கான நன்கொடைக் காசோலைகளினை எதிர்வரும் 24ஆம் திகதிக்கு முன்னர் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளுமாறும்,

காசோலை பெற நிர்வாக சபையின் தலைவர் அல்லது செயலாளர் பொருளாளருடன் சனசமூக நிலைய பற்றுச் சீட்டுப் புத்தகம், றப்பர் முத்திரை என்பவற்றைக் கொண்டுவருமாறும் அறிவிக்கப்படுகிறது. (உ-75)

## சைவச் சிறுவர் இல்லம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ் இந்துசமயப் பேரவையின் ஏற்பாட்டில் புனரமைக்கப்பட்ட கைதடி சைவச் சிறுவர் இல்லம் இன்று பி.ப 3 மணிக்கு வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்படவுள்ளது. (உ)

## முனியப்பர் கோயிலில் அன்னதானம்

(யாழ்ப்பாணம்)

தைப்பூசத்தை ஒட்டி இவ் வருடமும் வழமை போன்று யாழ். சிறைச்சாலை ஊழியர் சங்கம் கோட்டை முனியப்பர் ஆலயத்தில் இன்று அன்னதானம் மற்றும் பூசை வழிபாடுகளை நடத்தவுள்ளது. (உ-261)

## பொது வேலை நிறுத்தம் பிற்போடப்பட்டது

### பாரியளவில் நடத்தத் திட்டம்

(கொழும்பு)

வாழ்க்கைச் செலவு அதிகரிப்பு மற்றும் தொழில் நீக்கச் சட்டம் ஆகியவற்றைக் கண்டித்து எதிர்வரும் 21 ஆம் திகதி நடத்தப்படவிருந்த பொது வேலை நிறுத்தம் பிற்போடப்பட்டுள்ளது.

மேற்படி வேலை நிறுத்தத்தை பாரிய அளவில் நடத்த வேண்டும் என்றும் அதில் இணைந்து கொள்ள தம் தயாராக உள்ளதாகவும் பல தொழிற் சங்கங்கள் வேண்டுகோள் விடுத்ததையடுத்தே பொது வேலை நிறுத்தம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

எனினும், இவ் வேலை நிறுத்தம் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதிக்கும் 20 ஆம் திகதிக்கும் இடையில் நடைபெறும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

## தொழில் அமைச்சர் சைப்பிரஸ் பயணம்

(கொழும்பு)

இலங்கையர்களின் நலன்களை கவனிக்கவென தொழில் வேலை வாய்ப்பு அமைச்சர் மகிந்த சமரசிங்க சைப்பிரஸ் நாட்டிற்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

18ஆயிரம் இலங்கையர்கள் பணிபுரியும் அந் நாட்டில் வேலைவாய்ப்பு சம்பந்தமாக வேறு உயரதிகாரிகளை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவதும் இவரது பயணநோக்கமாகும்.

இதன் பின்னர் லெபனானுக்கு சென்று அங்கு சிறைச்சாலைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் இலங்கையர்களை அழைத்துவர நடவடிக்கை எடுக்கவுள்ளதுடன் எதிர்வரும் 25ஆம் திகதி நாடு திரும்பவுள்ளார். (உ-3)

## உயர்தர மாணவர்களுக்கு கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தில் இன்று காலை 9.00 மணிக்கு நடைபெறவுள்ள உயர்தர மாணவர்களுக்கான கருத்தரங்கில் ஸ்ரீராமகிருஷ்ண மிஷன் உபதலைவர் தவத்திரு சுவாமி ஆத்மகாணானந்தர் மகராஜ் ''மாணவர்களுக்கான மேம்பாட்டுக் கல்வி'' என்ற பொருளில் உரையாற்றவுள்ளார். (உ-3)

## எதிர்க் கட்சித் தலைவர் நாளை யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி. மகேஸ்வரனின் அழைப்புக்கு இணங்க நாளை திங்கட்கிழமை யாழ்ப்பாணம் வரவுள்ளார்.

ஒரு நாள் விஜயத்தை மேற்கொண்டு வரும் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ யாழ்ப்பாணம் ஆனைப்பந்தியடியில் 50 இலட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்டு வரும் ''வேதாகம குருகுல கலாசாலையை'' அன்று திறந்து வைக்கவுள்ளார். தொடர்ந்து யாழ்ப்பாணத்திலுள்ள முக்கிய இடங்களையும் உயர் பாதுகாப்பு வலயப் பிரதேசத்தையும் இவர் பார்வையிடவுள்ளார். (உ)

## ஈராக் நெருக்கடிக்குத் தீர்வாக

# சதாம் பதவி விலகவும் அமெரிக்கா போரைக் கைவிடவும் ஒரு யோசனை

(வாஷிங்டன்)

ஈராக் ஜனாதிபதி சதாம்ஹுசைன் தனது பதவியை இராஜினாமா செய்யவேண்டும் எனவும் போருக் கான ஆயத்தங்களை அமெரிக்கா கைவிட வேண்டும் என்றும் அமெரிக்க முஸ்லிம் அமைப்புக்கள் கோரிக்கை விடுத்துள்ளன.

அமெரிக்க முஸ்லிம் அரசியல் இணைப்பு என்ற அமைப்பே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளது.

அத்துடன் ஈராக்கில் தற் போது நிலவிவரும் சிக்கல்களைச் சீராக்கு வதற்கு ஐக்கிய நாடுகளும் இஸ்லா மிய சம்மேளனமும் சுதந்திரமான தேர்தல் ஒன்றை ஈராக்கில் நடத்த வேண்டுமென இப்பேரவை மேலும் வலியுறுத்தியுள்ளது.

இஸ்லாமைப் பொறுத்த மட்டில் சர்வாதிகாரம் பொருத்த மற்ற ஒன்று என்பதனால் சதாம்ஹுசைன் பத வியை இராஜினாமா செய்ய வேண் டும்.

அவ்வாறு பதவி விலகா விட்டால் ஈராக் மக்கள் மேலும் பல கஷ்டங் களை அனுபவிக்க நேரிடும் என்று குறிப்பிட்டுள்ள அவ்வமைப்பு, அமெ ரிக்கா' எடுத்து வரும் இராணுவ ரீதியி லான முனைப்புக்களைக் கைவிட வேண்டுமெனவும் அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யு புஷ்சை கோரி யுள்ளது.

### ஈராக் தலைவர்களை மறைத்து வைக்கமுயற்சி

(பேர்லின்)

ஈராக் ஜனாதிபதி சதாம்ஹுசேன் உட்பட ஈராக்கில் உள்ளசில தலைவர் களைச் சிறிது காலம் மறைவிட மொன்றில் வைப்பதற்கு அந்நாட்டு அரசாங்கம் இரகசியதிட்டங்களைத் தீட்டி வருவதாக நடப்பு விவகாரங் களை வெளியிடும் ஜேர்மனிய சஞ்சிகையான ''டேப்ஸ்பிஜியல்'' செய்தி வெளியிட்டுள்ளது.

தற்போது நிலவிவரும் பதற்ற நிலையை கருத்தில் கொண்டே இந்த நடவடிக்கை ஈராக் மேற் கொள்ளவுள்ளதாகவும் இவர் களை ஆபிரிக்கப் பிராந்தியத் திலுள்ள நாடொன்றில் மறைமுக மாக வைத்திருப்பதற்கான விஷேட பேச்சுவார்த்தைகளை ஈராக் அரசாங் கம் மேற்கொண்டு வருவதாக அந்த சஞ்சிகை மேலும் கூறுகின் றது.

எனினும் சதாம் ஹுசைனை மறைத்து வைக்கத் தெரிவு செய்யப பட்டுள்ள நாடு எதுவென அந்த சஞ்சிகை செய்திகள் எதனையும் வெளியிடவில்லை.

### ஐ.நா தீர்மானத்தை ஈராக் மீறிவிட்டது

ஈராக்கில் ஐக்கிய நாடு களின் ஆயுத சோதனையாளர் களால் கண்டுபிடிக்கப்பட்டுள்ள இரசாயன ஆயுதங்களை ஏற்றிச் செல்லக் கூடிய வெற்று ஏவுகணைகள் விவகாரம் பெரும் அச்சுறுத்தலை யும், கவலையையும் ஏற்படுத்தி யுள்ளதாக வெள்ளை மாளிகை அதிகாரிகள் கூறியுள்ளனர்.

இதன் மூலம் ஜனாதிபதி சதாம் ஹுசைன் ஆயுதக்களைவை விரும்ப வில்லையென்பது நிரூபணமாகியுள்ள தென வெள்ளை மாளிகையின் பேச்சாளரான ஏ.ரி. பெலிஷார் கூறி யுள்ளார்.

இரசாயன ஆயுதங்களை ஏந்திச் செல்லக்கூடிய பகிரங்கப் படுத்தப் படாத வெற்று ஏவுகணைகள் ஈராக் கிடம் இருப்பதாகவும் அவை ஏவப் படக்கூடிய மிகச் சிறந்த நிலையில் இருப்பதாகவும் ஆயுத சோதனை யாளர்கள் தெரிவித்திருந்தனர்.

இவை கண்டுபிடிக்கப்பட்ட தன் மூலம் ஐக்கிய நாடுகளின் தீர்மா னத்தை ஈராக் மீறியுள்ளமை நிரூபிக் கப்பட்டுள்ளதாக ஏ.ரி. பெலிஷார் மேலும் குறிப்பிட்டுள்ளார். (பி-2)

## கோபி அனான் இந்தியா விஜயம்

(புதுடில்லி)

ஐக்கியநாடுகள் சபையின் பொதுச் செயலாளர் கோபிஅனான் அடுத்த மாத இறுதிப்பகுதியில் இந்தியா வுக்கு விஜயம் செய்யவுள்ளார்.

இந்த விஜயத்தின் போது இவர் காஷ்மீர் விவகாரம் உட்படப் பல்வேறு பிரச்சினைகள் குறித்து இந்தியத் தலைவர்களுடன் பேச்சு வார்த்தைகள் நடத்துவாரெனத் தெரிவிக்கப்படுகின்றது. (பி-2)

## நடிகை ரேவதிஶ்ரீ தற்கொலை

(புதுடில்லி)

வாழ்க்கை,மற்றும் நம்பிக்கை போன்ற பிரபல நாடகத் தொடர் களில் நடித்துவந்த இந்திய நடிகை ரேவதி ஶ்ரீ தற்கொலை செய்து கொண் டுள்ளார்.

இரண்டு பிள்ளைகளின் தாயான ரேவதிஶ்ரீ குடும்பத் தகராறு காரண மாகவே தற்கொலை செய்துள்ளார் என்று சென்னைப் பொலிஸ் வட்டா ரங்கள் கூறுகின்றன. (பி-2)

## சட்ட விரோத நிதியமைப்பு ஸ்பெயினில் 101பேர் கைது

(மாட்ரிட்)

ஐரோப்பாவில் இயங்கிவந்த சட்ட விரோத நிதியமைப்பைச் சேர்ந்த 101 பேரைக் கொண்ட குழுவொன்றை ஸ்பெயின் அதிகாரி கள் கைது செய்துள்ளனர்

சட்ட விரோத நடவடிக்கை களுக்காக, நிதிதிரட்டும் செயல் களில் ஈடுபட்டு வந்த குழுக்களைக் கைது செய்யும்வகையில் மேற் கொள்ளப்பட்டு வந்த முற்றுகை யின் போது இவர்கள் பிடிபட்டனர்.

இவர்கள் ஸ்பெயின், கொலம் பியா,மற்றும் டொமினிக்கன் குடிய ரசு நாடுகளைச் சேர்ந்தவர்கள் என்றும் இந்த நபர்களிடம் இருந்து 100இலட்சம்டொலர்களும்542 கிலோ கிராம் கெரோயின் போதைப் பொருட்களையும் கைப்பற்றி யுள்ள தாக ஸ்பெயின் உள்துறை அமைச் சர் ஏஞ்சல்அஸ்பெஸ்ற் தெரிவித் துள்ளார். (பி-02)

## இந்தியா, நேபாளம், பங்களாதேஷில்

# ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கடும் குளிரிற்கு பலியாகினர்

(புதுடில்லி)

இந்தியா,பங்களாதேஷ் மற்றும், நேபாளம், ஆகிய நாடுகளில் தற்போது நிலவிவரும் கடும் குளிரி னால்உயிரிழந்தவர்களின் எண்ணிக் கை ஆயிரத்து 100ஆக உயர்வ டைந்துள்ளது.

இந்த கடும் குளிரினால் இந்தியாவின் உத்தரப் பிரதேசத் தில் 500ற்கும் மேற்படடோரும் பங்களாதேஷில் 530 பேரும், நேபா ளத்தில் குறைந்தது 70 பேரும் உயிரி ழந்துள்ளனர்.

கடந்த 6 வருடங்களின் பின்னர் ஏற்பட்ட மிக மோசமான குளிர் காலநிலை இதுவெனவும், உயிர் இழந்தவர்களில் பெரும்பாலான வர்கள் வீடுகளற்றவர்கள்என்றும் கூறப்படுகின்றது.

இதேவேளை குளிரினால் பாதிக் கப்பட்டவர்களுக்குஏற்ற உடைக ளும், உணவு உதவிகளும் வழங்கப் பட்டு வருவதாகவும் இந்த கால நிலை இன்னும் ஒரிரு வாரங்க ளுக்கு நீடிக்கலாமெனவும்தகவல்கள் மேலும் தெரிவிக்கின்றன. (பி-02)

உலக தரிசனம்

# காலம கடந்துகொண்டிருக்கிறது என், பொறுமை எல்லை மீறுகிறது!

## சதாம் மீது சீறுகிறார் அதிபர் புஷ்

(வாஷிங்டன்)

ஈராக் குறித்த தமது பொறுமை எல்லை மீறிப் போய்க் கொண்டி ருக்கிறது என்று அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் டபிள்யூ புஷ் எச்சரித் துள்ளார்.

பக்தாத் பேரழிவு ஆயுதங்கள் பற்றிய தனது தூய்மையை வெளிப் படுத்த வேண்டும். அதற்கேற்ற வகையில் ஐ.நா. சோதனை யாளர்களுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று புஷ் கூறினார்.

எண்ணெய் வளம் மிக்க வளை குடாவில் பெரும் எடுப்பில் அமெ ரிக்க விமானங்களும், கப்பல்களும் ஆயிரக்கணக்கான துருப்புக்களும் குவிந்துகொண்டிருக்கும் அதே வேளை, ''ஈராக்கின் இந்த ஏமாற்று விளையாட்டினால் நான் மிகவும் களைத்து சோர்வடைந்து போனேன்'' என்று கூறினார் அதிபர் புஷ்.

ஈராக்கிய அதிபர் ஹுசேனை கடும் சொற்களால் சாடிய அதிபர் புஷ் அவர்கள் ஆயுதங்களைக் களைந்துவிட்டதற்கான ஒரு ஆதாரத் தையும் நான் காணவில்லை. காலம் கடந்து கொண்டிருக்கிறது. அவர் ஆயுதங்களைக் களைந்தாக வேண்டும் என்று வற்புறுத்தினார்.

இதேவேளை, ஐ.நா இரண்டாவது தீர்மானம் ஒன்றை நிறைவேற்றினாலும் நிறை வேற்றாது போனாலும் ஈராக் மீதான தாக்குதலில் அமெரிக்கா வுடன் சேர்ந்து போரில் ஈடுபடுவ தற்கு பிரிட்டனும் ஆயத்தமாகி வருகின்றது.

வளைகுடா போர் ஆயத்த நிலை மை களால் அமெரிக்க டாலரின் மதிப்பு யூரோ நாணயத்திலும் பார்க்க குறைவான நிலைக்குத் தள்ளப்பட்டுவிட்டதாகவும்,எண்ணெய் விலைகள அதிகரித்திருப்பதாகவும் அவதானிகள் கூறுகின்றனர்.

ஈராக் மீது ஐ.நா கட்டுப் பாடுகளை விதிப்பதற்கு முன்னர் உலகின் எண்ணெய் ஏற்றுமதியில் எட்டாவது இடத்தை வகித்து வந்தது. ஆனால், அதன் எண்ணெய் வளங் கள் சவூதி அரேபியாவுக்கு அடுத்த நிலையில் இருப்பதாக நிரூபண மாகியுள்ளது.

ஐ.நா அதிகாரிகளிடம் மறைப் பதற்கு எங்களிடம் எதுவுமே இல்லை என்று ஈராக்கிய இணை அதிபர் தாரெக் அஸீஸ் கூறினார். சதாம் ஹுசேன் துணிச்சல் மிக்க தலைவர். கடைசி ஈராக்கிய தோட்டா இருக்கும் வரை அவர் போராடு வார் என்றார் அமைச்சர் அஸீஸ் (பி)

## ஊரடங்குச் சட்டம்

இந்தியாவின் மத்திய பிரதே சத்தில் இனக்கலவரங்கள் தொடங் கியுள்ளதை அடுத்து பொலிஸார் அங்கு உரடங்குச்சட்டம் அமுலப் படுத்தியுள்ளதாகத் தெரியவந் துள்ளது.

# சீனாவின் இராணுவ பலம் ஆசியாவுக்கு ஆபத்து

## தாய்வான் அதிபர் அச்சம்

(தைபீ)

இராணுவ பலத்தை அதி கரித்துவரும் சீனாவினால் ஆசியப் பிராந்தியத்திற்குப் பெரும் அச்சுறுத் தல் ஏற்பட்டிருப்பதாக தாய்வான் ஜனாதிபதி சென்ஜைபிஜன் கூறி யுள்ளார்.

பிராந்தியப் பாதுகாப்பு மா நாட்டை ஆரம்பித்து வைத்துப் பேசு கையிலேயே அவர் இதனைக் குறிப் பிட்டுள்ளார்.

சீனா குறுந்தூர மற்றும் நெடுந்தூர ஏவுகணைகளைத் தயாரித்து வருவதாகவும் இந்த நடவடிக்கை கள் ஆசியப் பிராந்தியத்தில் அச்சு றுத்தல்களை ஏற்படுத்தியுள்ளதா கவும் அவர் மேலும் தனது உரையில் தெரிவித்துள்ளார். (பி-2)

# ஐவரி-தீவிரவாதிகளுக்கு பிரான்ஸ் எச்சரிக்கை

(பாரிஸ்)

ஐவரிக் கோஸ்ட்டில் அமைதி யை நிலைநாட்டும் பொருட்டு தமது அனுசரணையுடன் நடத்தப் பட்டு வரும் பேச்சுவார்த்தைகளைப் பாதிப்படையச்செய்ய வேண்டா மென ஐவரிக் கோஸ்ட் தீவிரவாதக் குழுக்களைப் பிரான்ஸ் எச்சரித் துள்ளது.

ஐவரிக் கோஸ்ட் தீவிரவாதக் குழுக்கள்யுத்த நிறுத்த உடன் படிக்கையைமீறியுள்ளதையடுத்தே பிரான்ஸ்இந்த எச்சரிக்கையை விடுத் துள்ளது.

இதேவேளை பிரான்ஸ் தலை நகர் பாரிஸில் கடந்த திங்கட்கிழமை முதல் இடம் பெற்று வரும் சமாதா னப் பேச்சுவார்த்தைகள் மூடப்பட்ட கதவுக்குள் நடைபெற்று வருவதாக பிரான்ஸ் தகவல்கள் கூறுகின்றன.

# கம்பாலாவில் சர்வதேச கால்பந்தாட்டப் போட்டி

(கம்பாலா)

உகண்டாவிற்கும் அல்ஜீரியா வுக்கும் இடையில் எதிர்வரும் 25 ஆம் திகதி நட்புறவு சர்வதேசக் கால்பந்தாட்டம் உகண்டாவின் தலை நகரான கம்பாலாவில் இடம்பெற வுள்ளது.

இந்தப் போட்டிக்கு உகண் டாவின் முன்னணிக் கழகமான 'கிளப் வில்லா'விலிருந்து எந்த வீரர் களும் அணியில் சேர்த்துக் கொள் ளப்பட மாட்டாரென உகண்டா கால் பந்தாட்டச் சங்கம் தெரிவித்துள்ளது.

கிழக்குமற்றும் மத்திய ஆபிரிக் காவில் நடைபெறும் கழகங்களுக்கு இடையிலான சம்பியன் போட்டியில் கிளப்வில்லா விளையாட இருப்பதன் காரணமாக இத்தீர்மானம் எடுக்கப் பட்டுள்ளதாக உகண்டா கால்பந்தாட்ட சங்கம் கூறியுள்ளது. (பி-2)

## சோமாலியாவில் குழந்தைகள் கடத்தல்

(மொகடிஸ்ஸி)

சோமாலியாவிலிருந்து குழந்தை கள் வெளிநாடுகளுக்குக் கடத்தப்ப டுவதாக சர்வதேச நிறுவனமொன்று அறிக்கை வெளியிட்டுள்ளது.

கடத்தப்படும் இந்தக் குழந்தைக ளுக்கு 10 ஆயிரம் அமெரிக்க டொலர்கள் வரை விலையிடப் படுவ தாகவும் அந்த ஆய்வு அறிக்கை கள் கூறுகின்றன.

சோமாலியாவில் வறுமையில் வாழும் குடும்பங்கள் தமது குழந்தை கள் வெளிநாடுகளிலாவது வசதி யாக வாழவேண்டுமென கருதியே இவ்வாறு விற்பனை செய்கின்றனர் எனக் கூறப்படுகின்றது.

இதற்கிடையில் விற்பனை செய் யப்பட்ட பல குழந்தைகள் விமான நிலையங்களில் அனாதைகளாக விடப்படுகின்றனர் என்றும் பலர் கடினமான தொழில்களில் ஈடுபடுத் தப்படுகிறார்களெனவும் அந்த அறிக் கையில் விசனம் தெரிவிக்கப் பட்டுள்ளது. (பி-2)

# சிறுமிகளுக்கு வரவேற்பு

(கவுத்தமாலா சிற்றி)

தலையில் ஒட்டிப்பிறந்த இரு சிறுமிகள் மீது வெற்றிகரமாக நடத் தப்பட்ட அறுவைச் சிகிச்சையை அடுத்து அச்சிறுமிகள் தம் பெற்றோ ருடன் கவுத்தமாலா சிற்றியிலுள்ள தம் புதிய இருப்பிடத்திற்கு வந்த போது அவ்வூர் மக்கள் பலூன்களைப பறக்க விட்டும் இசைக் கருவிகளை இசைத்தும் வரவேற்பு அளித்தனர்.

17 மாதங்களே நிறைவான இச் சிறுமிகளுக்கு லொஸ் ஏஞ்சல்ஸில் அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டது. இச்சிறுமிகள் சிறிது காலம் இப் புதிய வீட்டில் தங்கி சுகம்பார்த்த பின்னர் தமது சொந்த இடத்திற்கு செல் வார்கள்.

மரியா டி ஜீஸஸ், மரியா தெரெ ஸா குயீஜ் என்ற பெயர் கொண்ட இச்சிறுமிகளுக்கு கடந்த ஆகஸ்ட் மாதம் 22 மணிநேர அறுவைச் சிகிச்சை நடத்தப்பட்டது. இந்த அறு வைச் சிகிச்சைக்கு சுமார் இர்ண்டு மில்லியன் அமெரிக்க டாலர் தேவைப்படும் என்று மதிக்கப்பட்டி ருந்தது. இதில் சம்பந்தப்பட்ட டாக்டர் களும் ஏனைய பிரமுகர்களும் தமது பணிகளை இலவசமாக வழங்கி யிருந்தனர். நன்கொடைகள் மூலம் குழந்தைகளின் பராமரிப்புக்கான ஒரு அமைப்பு இந்தச் சிகிச்சைக் கான செலவுகள்ளப் பொறுப்பேற்றிருந் தது. (பி)

## வடகொரியாவை நம்பவேண்டாம் என்கிறார் முன்னாள்தெ.கொரிய அதிபர்

(சியோல்)

அணுஆயுதப்பரவல் தடை ஒப்பந் தத்தில் இருந்து விலகியுள்ள வடகொரியாவை நம்ப வேண் டாமெனத் தென்கொரியாவின் முன் னாள் ஜனாதிபதி கிம்ஜோம் ஷாம் தனது நாட்டு அரசாங்கத்தையும் அமெரிக்காவையும் கேட்டுக் கொண் டுள்ளார்.

1994ம் ஆண்டில் வடகொரியா தனது அணுஆயுத நடவடிக்கைகளை ஆரம்பித்தது. அந்தக் காலப்பகுதி யில் தென்கொரிய ஜனாதிபதியாக இருந்து வந்த ஷாம் இக் கருத்தை வெளியிட்டுள்ளார்

அதேசமயம் இவர் வடகொரியா மீதுஎவ்விதமான தாக்குதல்களை யும் மேற்கொள்ள வேண்டா மெனவும் வலியுறுத்தியுள்ளார். அவ்வாறு தாக்குதல் இடம்பெற் றால் அது தென்கொரியா மற்றும், வடகொரியாவின் பொருளாதாரத் தில் பாதிப்பை ஏற்படுத்தும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார். (பி-02)

## இன்று ஒரு தகவல்

# பேச்சும் பழக்கமும்

ஒரு பேச்சுவார்த்தை நடந்து முடிந்தது. அதிலே கலந்து கொண்ட ஒருவர் வெளியே வந்தார். முகம் ஒருமாதிரியாக இருந்தது. "என்னசார்... எப்படியிருந்தது பேச்சுவார்த்தை?" என்று கேட்டேன். அவர்கொஞ்சம் கடுமையாக என்னைப் பார்த்தார். "அங்கே என்ன சார்... பேச்சுவார்த்தையா நடந்தது? சொற்பொழிவல்லவா நடந்தது!" என்றார். "ஏன்சார்... அப்படிச் சொல்கிறீர்கள்?" என்றேன் "பின்னே என்னசார்... எங்களை எங்கே பேசவிட்டார்? அவர் மட்டுந்தானே பேசிக் கொண்டிருந்தார். ஒருவரே பேசினால் அது எப்படி உரையாடல் ஆகும்? அது சொற்பொழிவு தானே!" என்றார்.

அவர் சொல்வதும் நியாயம் தான்! உரையாடல் என்பது ஒரு கலை. உதைபந்து விளையாடுகிறார்கள் அல்லவா, அதை அதற்கு உதாரணமாகச் சொல்லலாம். அதில் எப்படி ஒருவரிடம் ஒருவர் பந்தைத் தள்ளிக் கொண்டே போய் கடைசியாக இலக்கை நோக்கி ஓங்கி அடிக்கிறார்கள்? அதே மாதிரித்தான்... உரையாடலிலும் எல்லோரும் பங்கு கொள்கிறமாதிரி சமமான சந்தர்ப்பங்கள் கொடுக்க வேண்டும். அதைவிட்டுவிட்டு ஒருவரே பேச்சு என்கின்ற பந்தை தன்னுடைய நாக்கு என்கின்ற மைதானத்தில் வைத்து விளையாடிக் கொண்டிருக்கக்கூடாது. அப்படிச் செய்தால் அது உரையாடலில்லை. அது சொற்பொழிவுதானே! எதிராளிக்கு அதனால் என்ன இன்பம் இருக்கப் போகிறது? எரிச்சல்தான் வரும். அதனாலே தான் இவர் இப்படி என்னிடம் சொல்கிறார்.

ஒருவருக்கொருவர் எப்படிப்பேசிக்கொள்வது என்பதைக் கூட நமது ஆட்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டியிருக்கிறது சார்! ஒரு நல்ல பொது ஜனத்தொடர்பு அலுவலராக (P.R.O) இருப்பது எப்படி? மனித உறவுகளை மேம்படுத்துவது எப்படி? இவைகளைப் பற்றிக் கூட நிபுணர்கள் சில குறிப்புகளைக் கொடுத்திருக்கிறார்கள். ஒருவரிடம் நாம் பேசும்போது, அவர்கள் மீது நமக்கு அக்கறை இருக்கிறது என்பதை அவர்கள் புரிந்து கொள்கிற மாதிரிப் பேசவேண்டும். "என்ன! எப்படி இருக்கிறீர்கள்" என்று பிரியமாக ஆரம்பிக்கலாமே! மற்றவர்களைத் தாராளமாகப் பாராட்டலாம். அதிலே விஷயம் இருக்கிறது, அதுதான் எல்லாவற்றிற்கும் அத்திபாரம்.

யாரிடம் பேசுகிறோமோ அவருக்கு நாம் ஒரு நல்ல நண்பர் என்பதைக் காட்ட வேண்டும். அதற்குத் தகுந்தமாதிரிப் பேசவேண்டும்... நடந்து கொள்ள வேண்டும். நேரில் நல்லவிதமாகப் பேசிவிட்டு... அந்த ஆள்போனதன் பின்னர் "அவன் கிடக்கிறான்" என்று நினைக்கக்கூடாது. நம் எதிரில் உட்கார்ந்திருக்கிறவர் தன்னைப்பற்றி என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாரோ அது சரிதான் என்பதை நாமும் ஒத்துக் கொள்ளவேண்டும். அவர் சொல்வதை ஆர்வமாகக் கேட்க வேண்டும். அதன் பின்னர் நாம் நினைக்கின்ற கருத்தை வலியுறுத்தலாம்.

இப்பொழுது...' நம்மை மற்றவர்கள் புகழவே வேண்டும் என்று நாம் ஆசைப்படுகிறோமல்லவா. இதே ஆசை மற்றவர்களுக்கும் இருக்கும் அல்லவா? அதனாலே புகழ்வதற்குத் தயங்கக் கூடாது. பொய்யாகப் புகழக்கூடாது. அவ்வளவுதான்! ஒருவருக்குத் தலையில் முடியே இல்லை... அது எல்லாருக்கும் தெரிந்த விஷயம். அவரிடம் போய் உங்கள் கூந்தல் எவ்வளவு அழகாக இருக்கிறது என்று சொன்னால்... அதைப் புகழ்ச்சி என்று எடுத்துக் கொள்ளமாட்டார், அதைக் கிண்டல் என்றுதான் நினைப்பார்.

ஒரு புதுக்கருத்தை நாம் சொல்லப்பேகிறோம் என்றால் அதற்கு அவசரப்படக்கூடாது. நிலத்தை உழுது பக்குவப்படுத்திய பின்புதானே நாற்று நடுகிறோம். அதுமாதிரி அவர்கள் மனதைப் பக்குவப் படுத்துவது மாதிரிப் பேசி, அதன் பின்னர் மெதுவாக நாம் நினைத்த கருத்தை எடுத்து வைக்கவேண்டும். குழப்பம் காரியத்தைக் கெடுத்துவிடும். அதனால் நாம் தெளிவாக இருக்க வேண்டியது முக்கியம். நாம் யாரிடம் பேசப்போகிறோமோ அவருக்கு என்ன பிடிக்கும் என்று தெரிந்து கொள்வதைவிட... அவருக்கு என்ன பிடிக்காது என்பதை முதலில் தெரிந்து கொள்ளவேண்டும். நிலமை சரியில்லையென்றால் பேச்சையே ஆரம்பிக்கக்கூடாது. எப்போதுமே நம்மைப்பற்றி ஒரு நல்ல அபிப்பிராயத்தை உருவாக்கிக் கொள்ளவேண்டும். அப்படி ஒரு நல்ல அபிப்பிராயம் உருவாகிவிட்டதென்றால் அதைத் தொடர்ந்து காப்பற்றிக் கொள்ளவேண்டும்.

இப்படிப்பட்ட நுணுக்கங்களையெல்லாம் புரிந்து கொண்டால் தான் இந்த உலகத்திலே சுமுகமாக இருக்கமுடியும். இதுதான் மனித உறவுமுறை. மற்றவர்களிடம் சரியாகப் பேசவும், பழகவும் தெரியவில்லையென்றால் என்ன சார் பிரயோசனம்?

மிகவும் நாசூக்காகப் பேசத்தெரிந்த ஒருவர், இன்னொரு நண்பர் வீட்டுக்குப் போயிருந்தார், கொஞ்சநேரம் உரையாடிவிட்டுவரலாம் என்று நினைத்து! அவர் என்ன பண்ணினார் தெரியுமா? "அவர்கள் வீட்டில் 15 நாட்களுக்கு முன்பு செய்து மிகுந்து போயிருந்த பலகாரத்தை இவர் முன்னால் கொண்டு வந்து வைத்து எங்கள் வீட்டில் தயார் பண்ணியது இது சாப்பிடுங்கள்சார் சாப்பிட்டுக் கொண்டே உரையாடுவோம்" என்றார் அவரும் வேறு வழியில்லாமல் சாப்பிட ஆரம்பித்தார்.

ஓர் அரைமணிநேரம் பேசிக்கொண்டிருந்துவிட்டு அவர் எழுந்தார், சார் நான் போய்விட்டுவருகிறேன் என்று சொல்லிக்கொண்டு...! "ஒன்றும் அபிப்பிராயம் சொல்லாமல் போகிறீர்களே சார்" என்றார் இவர். இதற்கு அவர் "இன்றைக்கு நமக்குள் ஏற்பட்ட இந்தச் சந்திப்பு, ஒரு பதினைந்து நாட்களுக்கு முன்னால் நடந்திருந்தால், நன்றாயிருக்கும் என்பது என்னுடைய அபிப்பிராயம்" என்று சொல்லிவிட்டு, வயிற்றை அழுத்திப் பிடித்துக் கொண்டு அவசரமாக நடையைக்கட்டினார் இவர் நல்ல ஒரு P.R.O.

– தென்கச்சி கோ. சுவாமி நாதன்.

சுன்னாகம் – கந்தரோடையில்

# பௌத்த விகாரை அமைப்பது குறித்து கண்காணிப்பு குழுவுக்கு சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்ட நாளைத் தொடர்ந்து நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தைகளினால் சமாதானம் கிட்டும் என்ற பெரும் எதிர்பார்ப்புடன் வாழும் எமது மக்களுக்கு கந்தரோடையில் தற்போது மேற்கொள்ளப்பட்டுவரும் விகாரை அமைக்கும் முயற்சி பெரும் விசனத்தையும், சமாதானம் பற்றிய பேச்சுக்களில் சந்தேகத்தையும் ஏற்படுத்துவதாக அமைந்துள்ளது.

வலி - தெற்கு பொது அமைப்புக்களின் ஒன்றியம் இலங்கை போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் யாழ். அலுவலகத்தில் கையளித்துள்ள மகஜரில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த மகஜரில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

பேச்சுவார்த்தை நடைபெறும் இக்கால கட்டத்தில் அமைதிக்குப் பங்கமேற்படும் வகையிலான எவ்வித செயற்பாடுகளையோ போராட்டங்களையோ தவிர்க்க வேண்டும் என்று தங்கள் குழுவினர் எம்மத்தியில் பல தடவைகள் அறிவுறுத்தல்கள் வழங்கி வருகின்றீர்கள்.

ஆனால், எமது மக்களிடம் அமைதியையும் புரிந்துணர்வையும் சிதைக்கும் வகையில், ஒரு சிங்களக் குடியிருப்போ, பௌத்த குடிமகனோ இல்லாத ஒரு சிறிய கிராமத்தில் புராதன வழிபாடுகள் அங்கு இருக்கின்றமையைச் சாட்டாக வைத்துப் பௌத்த விகாரை அமைக்கும் முயற்சியில் இறங்கியுள்ளமை அமைதிக்கு பங்கம் விளைக்கும் அடாவடித்தனம் என்பதைத் தாங்கள் ஏற்றுக் கொள்வீர்கள் என நம்புகின்றோம்.

நாம் பௌத்ததிற்கு எதிரானவர்கள் அல்ல. பௌத்த தத்துதவத்தைப் புரிந்து கொள்ளாதவர்களும் அல்ல. பொருந்தமற்ற நேரத்தில் மத உணர்வுகளைப் பேரினவாதிகளின் மத்தியில் ஏற்படுத்தி பேச்சுவார்த்தையைக் குழப்பியடிக்கக் கூடிய ஒரு மறைமுகமான சூழலை உருவாக்கி வைத்திருக்க அரசாங்கம் மேற்கொள்ளும் சதித்திட்டத்தின் ஒரு அங்கமே இச்செயற்பாடு என்று நாம் கருதுகின்றோம்.

தென்னிலங்கையில் உருவாகி வரும் பௌத்த சிங்கள பேரினவாதமே சமாதான பேச்சுக்களை குழப்பியடிக்கக் கூடிய சக்தி என்பதனை யாவரும் அறிவர். கடந்த 50 ஆண்டகளாக ஈழத்தமிழ் மக்கள் நடத்திவரும் விடுதலைப் போராட்டங்களின் போது, அரசாங்கத்தோடு அவ்வப்போது செய்து கொண்ட சமாதான ஒப்பந்தங்கள் யாவும் பௌத்த சிங்கள பேரினவாதத்தால் கிழித்தெறியப் பட்டமையே வரலாறாகும். அதற்குத் தீனிபோடும் அரசாங்கத்தின் இச்செயற்பாட்டை எம்மால் ஏற்றுக் கொள்ளமுடியாது.

எமது மக்கள் எமது மண்ணிலேயே வழிபாட்டு உரிமையை இழந்து நிற்கின்றார்கள். பாதுகாப்பு வலயமென்றும், இராணுவ வதிவிட வட்டமென்றும் கூறிக்கொண்டு எமது புண்ணிய ஸ்தலங்களை, குலதெய்வங்களைச் சென்று வழிபடும் உரிமை அரசாங்கத்தினால் மறுக்கப்படுகிறது.

இந்த அடிப்படையில் மனித உரிமையே அற்ற அடிமைகளாக வாழும் எம் மத்தியில் வந்து இவ் விகாரையை அமைப்பது எம்மை இழிவுபடுத்துவதாகவே அமைகின்றதுடன், விகாரை நிறுவப்படும் இடத்தை சார்ந்த மக்கள் மனச் சஞ்சலத்தோடும், பதற்றத்தோடும், பயப்பிராந்தியத்தோடும் வாழுகின்றார்கள்.

இன்றைய நிலையைப் பயன்படுத்தி ஒவ்வொரு மதத்தினரும் இத்தகைய செயல்களில் ஈடுபட்டால் இனப் போராட்டத்துடன் மதப் போராட்டமும் இணைந்து கொள்ளும் துர்ப்பாக்கிய நிலை உருவாகும்.

எனவே, சமாதான நடவடிக்கைகளை அரசாங்கம் இதயசுத்தியோடு மேற்கொள்வதை உறுதிப் படுத்தும் வகையில் இவ் விகாரை அமைக்கும் செயற்பாட்டை உடனடியாக கைவிட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறோம் என்று குறிப்பிட்டுள்ளது.

பிரதமமந்திரி, கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர்கள், இலங்கைக்கான நோர்வேத் தூதுவர், யாழ். அரசாங்க அதிபர் ஆகியோருக்கும் இம் மகஜரின் பிரதிகள் அனுப்பி வைக்கப்படடுள்ளன. (உ)

## இராசி பலன்

**19. 01. 2003**

**(தை 5 ஞாயிறு)**

பிரதமை பி.ப 4.15
பூசம் பி.ப 4.44 வரை
இராகுகாலம் - 5.05 - 6.35
சுபநேரம் 9.35- 11.05

**தைப்பூசம்**

**மேடம்**
உடல்சோர்வு, மாதர்சுகம், முயற்சி தாமதம், புதியதிருப்பம்

**இடபம்**
நினைத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை, உறவினர் சந்திப்பு, வாக்குபலிதம்

**மிதுனம்**
கடுமையான வார்த்தை, முயற்சி தாமதம், சத்துரு ஜெயம், தனவிரயம்

**கடகம்**
கற்பனை மிகுதி, பெரியோரால் மதிக்கப்படுதல், முயற்சி தாமதம், நல்ல சம்பவம்

**சிங்கம்**
அலைச்சல், சுபசெலவு, தெய்வ சிந்தை, உணர்ச்சி வசப்படல்

**கன்னி**
தடைப்பட்ட கருமங்கள் நிறைவெறும், குடும்பசுகம், இலட்சுமிகரம், தலாபம்

**துலாம்**
தொழில் சிந்தை, நல்ல சம்பவம், திட்டமிடல், தெய்வ தரிசனம்

**விருச்சிகம்**
மனச்சஞ்சலம், நிலைக்கேடு, சகோதரர் உதவி, புதிய சிந்தை

**தனுசு**
வாகனபயம், உறவினர் எதிர்ப்பு, உடல்வியாதி, காரியதடங்கல்

**மகரம்**
குடும்ப சுகம், முயற்சிகைக்கூடும், நண்பர்கள் சந்திப்பு, தேகநலன்

**கும்பம்**
செய்தொழில் முன்னேற்றம், குடும்பத்தில் மகிழ்ச்சி, பிறர்உதவி, தனவரவு

**மீனம்**
புத்திரரால் கவலை, உடல் நலக்குறைவு, புதிய தொழில் சிந்தை, காரியம் தாமதம்

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

**- வளவன்**

# குடிமனைக்குள் வீழும் துப்பாக்கிச் சன்னங்கள்

(காரைநகர்)

காரைநகர் கடற்படைத் தளத்தில் கடற்படையினர் துப்பாக்கியால் சுடும் பயிற்சியில் ஈடுபடும் போது ஊர்காவற்றுறை கரையோர கிரமமான பருத்தியடைப்பு கிராம வீட்டுத்திட்ட வீடுகளில் ரவைகள் விழுந்து சேதத்தை ஏற்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் ஏ.9பாதையினூடாக மீளக்குடியமர்ந்தவர்களிற்கு அரச காணிகள் பகிர்ந்தளிக்கப்பட்டு யு.என்.எச்.சி.ஆரின் உதவியுடன் வீடுகள் அமைக்கப்பட்டு பருத்தியடைப்பில் குடியேற்றப்பட்டுள்ளனர்.

இப்பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடந்த வியாழன் அன்று இரவு 7.00 மணி தொடக்கம் நள்ளிரவு 11.00 மணி வரைக்கும் சுமார் 4 மணிநேரமாக துப்பாக்கி சுடும் பயிற்சியில் ஈடுபட்டுள்ளதால் ஒரு வீட்டில் விழுந்து உடுபிடைவைகள் எரிந்துள்ளன. அத்துடன் பல பனைகள் சேதமடைந்துள்ளன.

இச்சம்பவத்தால் அச்சமுற்றிருக்கும் இக் கிராம மக்கள் மேலும் இவ்வாறான சம்பவம் நிகழும் ஆயின இடம்பெயர வேண்டியேற்படும் எனவும் கவலை தெரிவித்துள்ளனர்.

இச்சம்பவம் பற்றி அப்பகுதி கிராம சேவையாளருக்கும், ஊர்காவற்றுறை பிரதேச செயலருக்கும் தெரியப்படுத்தியுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட மக்கள் தெரிவித்துள்ளனர். (உ.246)

# இடியன் வெடித்து ஒருவர் பலி

(உடுவில்)

"இடியன்"துப்பாக்கி வெடித்தில் குடும்பஸ்தர் ஒருவர்பலியானார். கடந்த வாரம் முதலாம் யுனிற், தருமபுரம் பகுதியில் இச்சம்பவம் இடம்பெற்றது.

சம்பவதினம் இரவு பிரஸ்தாப நபர் கதைத்துக் கொண்டிருந்த வேளையில் இடியன் துப்பாக்கி தவறுதலாக வெடித்ததினால் அவர் பலியானார்.

இச்சம்பவத்தில் கொல்லப்பட்டவர் ஒரு பிள்ளையின் தந்தையாகிய சோமு குமார் என்பவராவார். (உ- 261)

வெள்ளப் பாதிப்பு

# அறிக்கை சமர்ப்பிக்க பிரதமர் உத்தரவு

(கொழும்பு)

அம்பாறை மாவட்டத்தில் அடிக்கடிதோன்றும் வெள்ளப் பெருக்குக்குரிய காரணங்கள் குறித்து நேற்று முன்தினம் விசேட கூட்டம் ஒன்று நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவரும் அமைச்சருமான ரவூப்ஹக்கீம் உட்பட நீர்பாசனத் திணைக்கள அதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர்.

வெள்ள அனர்த்தம் காரணமாக கிழக்கு மாகாணத்தில் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

இதேவேளை, இப்பிரதேசங்களில் வெள்ளத்தால் ஏற்படக் கூடிய பாதிப்புக்களை கட்டுப்படுத்தக் கூடிய திட்டங்கள் குறித்து வரிவான அறிக்கை ஒன்றினை சமர்ப்பிக்குமாறு பிரதமர், அமைசசர் ஹககீமுக்கு உத்தரவிட்டுள்ளார். (உ-8)

# புலிகளிடம் உள்ள ஆயுதங்கள் களையப்பட வேண்டும்

## ஜப்பான் தூதுவரிடம் ஜே.வி.பி கோரிக்கை

(கொழும்பு)

தமிழீழவிடுதலைப்புலிகள் தொடர்ந்தும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருவதால், அவர்களிடம் இருந்து ஆயுதங்களைக்களைய வேண்டும் என்று ஜே.வி.பியின் பிரசார செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான விமல் வீரவன்ச ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அகாசிடம் கேட்டுள்ளார்.

ஜப்பான் விசேடத் தூதுவர் யசூசி அகாசியை ஜே.வி.பி யின் பிரசார செயலாளர் விமல் வீரவன்சவும் மற்றும் ஜே.வி.பி யின் பாராளுமன்ற உறுப்பினர்கள் நேற்று முன்தினம் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர். இப்பேச்சவார்த்தையின் போது, ஜே.வி.பியினா தெரிவித்த கருத்துக்குப் பதிலளித்த ஜப்பான் விசேடத் தூதுவர் அகாசி அரசினதும், விடுதலைப்புலிகளினதும் சமாதான முயற்சிகளை நாம் அவதானித்து வருகின்றோம். நோர்வே, இலங்கைக்குச் செய்யும் பங்களிப்பைப்போலவே ஜப்பானும் இலங்கைக்கு உதவி செய்து வருகிறது, இதனையே எம்மாலும் செய்ய முடிகிறது என்று ஜே.வி.பியினரிடம் தெரிவித்துள்ளார். (ம)

வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர்
வைத்தூறு போலக் கெடும் .குறள்

வலம்புரி

## அமைச்சர் பீரிஸின் யதார்த்த சிந்தனை

விடுதலைப் புலிகள் தம்மிடமுள்ள ஆயுதங்களை உடனடியாகக் கைவிடுவது சாத்தியமில்லை. இவ்வாறு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகள் தம்மிடமுள்ள ஆயுதங்களைக் கைவிட்ட பின்னரே அவர்களுடன் அரசு பேச்சு நடத்த வேண்டுமென்பது பொதுஜன ஐக்கிய முன்னணியின் கருத்து. இக்கருத்தை அரச தரப்பு அமைச்சர் ஒருவர் கடுமையாக மறுத்திருப்பது இலங்கையின் வரலாற்றில் புதியதொரு திருப்பம் என்றே கூற வேண்டும்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரமாகத் தீர்வு காண்பதற்கு முன்னதாக ஆயுதங்களைக் கைவிடுமாறு விடுதலைப் புலிகளிடம் கேட்க முடியாதென்பது அமைச்சா பீரிஸின் அறிவிப்பு. இதற்கு அவர் கூறும் காரணம் உலக வரலாற்றில் சமாதானமான தீர்வொன்றைக் காண்பதற்கு முன்னதாக எந்தவொரு தீவிரவாத அமைப்பும் ஆயுதங்களைக் கைவிட்டதாகச் சரித்திரம் இல்லை. அப்படியொரு நிலையில், விடுதலைப் புலிகளிடம் ஆயுதங்களைக் கைவிடுமாறு எப்படிக் கோர முடியும், என்பது அவர் பக்க நியாயம்.

இத்தகையதொரு நியாயத்தை அமைச்சர் பீரிஸ் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்காவிடம் கேட்டிருந்தார். அதனோடு மட்டும் அவர் விட்டுவிட வில்லை. தனது யதார்த்தமான நியாயத்தை அவர் இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதுவர்களிடமும் கேட்டுள்ளார். பீரிஸின் இக்கேள்வி மிகமிக முக்கியமான தொன்றாகும். ஏனெனில் பீரிஸ், தனது நியாயத்தை ஜனாதிபதியிடம் மட்டும் கேட்டிருந்தால், அது எதிர்க் கட்சி சார்ந்த பகைமையால் கேட்கப்பட்டது எனக் கருதிக் கொள்வதற்கும் சந்தர்ப்பம் உண்டு.

ஆனால் அதனை முறியடிக்கும் வகையில், அமைச்சர் பீரிஸ் தனது கேள்வியை, இலங்கைக்கான வெளிநாட்டுத் தூதுவர்களிடமும் கேட்டுள்ளார். இ்து அவரின் யதார்த்த சிந்தனையை, சமாதானத்தின் பால் அவர் கொண்டுள்ள பற்றுறுதியை வெளிப்படுத்தியுள்ளது.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களை வைத்திருப்பது நாட்டில் பயங்கரவாத நடவடிக்கைகளை அதிகரிக்கச் செய்யுமென பொதுஜன ஐக்கிய முன்னணியும், இனவாதக் கட்சிகளும் பிரசாரம் செய்துவரும் இவ்வேளையில் அமைச்சர் பேராசிரியர் பீரிஸ், வெளிநாட்டுத் தூதுவர்களை அழைத்து விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிடுவது உடனடிச் சாத்தியமில்லை எனக் கூறியுள்ளார். இதன் மூலம், சர்வதேச ரீதியில் விடுதலைப்புலிகளுக்கு எதிராக மேற்கொண்ட பிரசாரங்கள் யாவும் தவிடு பொடியாக்கியுள்ளதுடன், விடுதலைப் புலிகள் ஆயுதங்களை வைத்திருப்பதையும் அது நியாயப் படுத்தியுள்ளது.

அமைச்சர் பீரிஸின் அறிவித்தல் சமாதானத்தின் பால் நம்பிக்கையை மேலும் வலுப்படுத்தியுள்ளது.

# நீரோடைக்கு அருகில் உள்ள மரங்கள் போல ஆண்டவர் அருகில் இருப்பவர் ஆனந்தமடைவர்

## பரம பிதா காட்டிய பாதை

எண்ணமே செயலின் தொடக்கம்; திட்டமிடல் எல்லாச் செயலாக்கத்திற்கும் முன் செல்கிறது. (சீராக் 37:16) மனிதனின் எண்ணங்களே அவனை வழிப்படுத்துகின்றன. உள்ளத்தின் நிறைவில் நின்றே வாய் பேசும். அதே போல எண்ணத்தின் வழியிலே செயல்கள் நடக்கும். எனவே மனிதன் எப்படி எண்ணுகிறானோ அதுவாகவே ஆகிவிடுகிறான். காரணங்கள் இல்லாமல் காரியங்கள் பிறக்கமாட்டா. எண்ணங்களின் வலிமையால் இயக்கப்படும் எம் உடலானது நல்வழிப்படுத்தப் படுகின்ற போது நல்லவை பிறப்பதற்கு ஏதுவாகின்றது. திருமுழுக்கின் மூலம் ஒவ்வொரு கிறிஸ்தவனும் இயேசு கிறிஸ்து என்ற மறை உடலின் உறுப்புக்களாக மாறுகின்றனர். அத்துடன் இறைவன் வாழுகின்ற இல்லங்களாக, ஆலயங்களாக மாற்றப்படுகின்றனர். எனவே கட்வுள் வாழும் இல்லத்தைப் புனிதமாகக் காக்க வேண்டியது எமக்குக் கடமையும் பொறுப்புமாகும்.

### நல்வழிப்படுத்துவதே நற்குணம்

ஆண்டவரோடு சேர்ந்திருப்பவர் அவருடன் உள்ளத்தால் ஒன்றித்திருக்கிறார். (1 கொரி 6:17) தங்களைப் படைத்த ஆண்டவரிடம் தங்கள் உள்ளத்தைக் கையளிப்பவர் என்றும் மனமகிழ்ச்சியாக இருப்பார்கள். உலக இன்பங்களை நாடி ஓடுபவர்கள் மலர் தூவிய வீதிகளில் நடந்து பொறிவைத்துள்ள குழியிலே வீழ்வார்கள். யாரையும் நாம் பழித் துரைக்கக் கூடாது. இயன்றவரை அறிவுரை



களைக் கூறி, தீமையிலிருந்து நல்வழிப்படுத்துவதே எமது நற்குணப் பண்பாகும். காலத்தின் வளர்ச்சிப் போக்கில் ஒவ்வாத செயல்களும், நடத்தைக் கோலங்களும், சமுதாய சீரழிவுகளும் மெல்ல மெல்ல எமக்குள்ளே புகுந்து கொண்டு இருக்கின்றன. அவைகளில் இருந்து எம்மை நாம் காப்பாற்றிக் கொள்ள வேண்டும். ஒருவன் உலகமெல்லாம் ஆதாயமாக்கிக் கொண்டாலும் தன் ஆன்மாவை இழந்து விடுவானாகில் அவனுக்கு வரும் நன்மை ஒன்றுமில்லை. அவன் இரக்கத்திற்குரியவன். தீயவன் வலையில் சிக்கிக் கொண்டவன் அவன் மனந்திரும்பினால் அன்றி, அவன் அழிவதே அவனின் முடிவாகும்.

### கடவுளுக்குப் பெருமை சேருங்கள்

உங்கள் உடல் நீங்கள் கடவுளிடமிருந்து பெற்றுக்கொண்ட, தூய ஆவி தங்கும் கோவில் என்பது தெரியாதா? நீங்கள் உங்களுக்கு உரியவரல்ல. கடவுள் உங்களை விலை கொடுத்து மீட்டுள்ளார். எனவே உங்கள் உடலால் கடவுளுக்குப் பெருமை சேருங்கள். (1 கொரி 6:20) எதிர் காலத்தையும் இறுதி நாளையும் பற்றிய எண்ணங்கள் மனிதருடைய சிந்தனையைக் குழப்பி உள்ளத்தை அச்சுறுத்துகின்றன. இருந்த போதும் மனிதன் தான் விரும்பிய போக்கிலே தற்துணிவாக செயற்பட்டுக் கொண்டேயிருக்கிறான். வேதங்கள். கூறுகின்ற அறிவுரைகளைப் புறக்கணித்து வேறான ஒரு பாதையைத் தனக்கென வகுக்கின்றான். இதனாலே அடிமைத்தனத்தின் விலங்குகளைத் தனக்குத் தானே போட்டுக்கொண்டு அலைக்களிக்கப்படுகின்றான்.

நீரோடையின் அருகில் நடப்பட்ட மரமாக ஆண்டவருக்கு அருகில் இருப்பவர்கள் என்நாளும் மகிழ்ச்சியை அணிந்து கொள்வார்கள். கண்டகண்ட இடங்களில் முளைத்த மரங்கள் செழிப்பற்றும், பாதுகாப்பற்றும் முறிபடவும், வெட்டப்படவும் ஏதுவாகின்றன. எனவே இறைவனின் அரவணைப்பில் அவரைப்பற்றிப்பிடித்துக் கொண்டவர்களாக எமது எண்ணங்களை, செயல்ப்பாடுகளை, எமது வாழ்வை அமைத்துக் கொண்டால் உலகின் சிற்றின்பச் சூறாவழிகளும், பாதுகாப்பற்ற வறட்சிகளும் எம்மை அணுகாது. எம் எண்ணங்கள், செயற்பாடுகள் சமுதாயத்திற்கு நன்மை பயப்பதாக அமையும். நல்லதொரு சமுக வாழ்விற்கு வழிகாட்டலாக அமையும். இறை பற்றுள்ள சமூக உருவாக்கத்திற்கு வழி கோலும். காலத்தின் தேவையை கருத்திற் கொண்டு பொருத்தமுள்ள செயற்பாடுகளை முன்னெடுக்க ஏதுவாகும். இவ்வாறாக எம் எண்ணங்கள், செயல்கள் தூய் மையுள்ளதாக் அமையும் போது நாம் மேற்கொள்ளும் வாழ்வும் பண்புள்ள சகோதரத்துவ உறவை வளர்க்கும் வாழ்வாக நிலைபெறும் என்பது உண்மையாகும்.

மரிய நிலக்ஷி செல்வமகள்

# போரில் காணாமல் போன படையினரின் பெற்றோர் சங்கம் பாலாவின் கருத்துடன் உடன்பாடு

(கொழும்பு)

சண்டையின் போது இறந்த படையினரின் உடல்களை ஏற்க மறுத்த முன்னைய அரசாங்க அதிகாரிகள் அவர்களைக் கடமையின் போது காணாமல் போனவர்கள் பட்டியலில் சேர்த்திருக்கின்றனர்.

தென்னிலங்கையில் அரசுக்கெதிரான உணர்வலைகள் பற்றியும், படையினரின் மனவுறுதி குலைந்து விடலாம் என்பது பற்றியும் அச்சம் கொண்டிருந்ததே இதற்குக் காரமணம் என்று விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் தாய்லாந்தில் தெரிவித்த கருத்துப்பற்றி காணாமற் போன படையினரின் பெற்றோர் சங்கம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

மேற்படி சங்கத்தின் தலைவியான விசாகா தர்மதாச, பாலசிங்கத்தின் கூற்று உண்மையே என தெரிவித்துள்ளார். முன்னைய அரசாங்கம் இறந்த படையினரின் உடல்களை ஏற்க மறுத்தமை பற்றி நாம் நன்றாகவே அறிந்திருந்தோம். அதிகாரிகளின் நடத்தைகள் பற்றி வேதனையடைகின்றோம். தாய் நாட்டிற்காக உயிர்களை அர்ப்பணித்த வீரர்கள் இப்படி நடத்தப்பட வேண்டுமா என்பதைப் பற்றி மக்களே தீர்மானிக்கட்டும் என்று விட்டுவிடுவோம் என்று மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, இறந்த உடல்களை எங்கு எவ்வாறு புலிகள் அடக்கம் செய்தனர் என்ற விபரங்களைத் தருமாறு கேட்டுள்ள விசாகா, அவற்றின் மீது அரசாங்கம் மரபணுப் பரிசோதனைகளை செய்ய வேண்டும் என்றும், இத்தகைய தகவல்களை வெளிப்படுத்துவதற்கு வாய்ப்பான அமைப் பொன்று செயற்படுவது பற்றி தனது மகிழ்ச்சியையும் தெரிவித்துள்ளார். (உ)

## யாழ். சிறைச்சாலையில் ஆளணிப் பற்றாக்குறை ஓரளவு நீங்கியது

(உடுவில்)

யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் கடமையாற்றி வந்த பணியாளர்கள் சிலர் சேவை மூப்பு அடிப்படையில் பதில் சிறைக் காவலர்களாக பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

ஆ.மகேஸ்வரன், க.மகேந்திரன், க.நாகேந்திரன் ஆகிய மூவருமே இவ்விதம் பதவி உயர்த்தப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களில் இப்பதவிக்குரிய உத்தியோகத்தர்கள் தென்பகுதியிலிருந்து இங்கு வந்து ஒப்பந்த அடிப்படையில் பணியாற்றிச் சென்றிருந்தனர்.

யாழ். சிறைச்சாலை செயற்படத் தொடங்கிய கடந்த 07 ஆண்டுகளாக நிலவிவந்த இப்பதவிகளுக்கான வெற்றிடத்தை அரசு தற்போதே நிரப்பியுள்ளது.

இதேவேளை, யாழ். சிறைச்சாலையில் நிலவும் ஊழியர் பற்றாக்குறையைக் கருத்தில் கொண்டு புதிதாக 8 பேர் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப்பட்டுள்ளனர். (உ-261)

## தினசரி தியானம்

### சொல்லும் செயலும்

மனதைத் தந்திரமாகவும், சாமர்த்தியமாகவும் கட்டுப்படுத்து. சரியாகவும் சிந்தனை செய். நாவைக் கட்டுப்படுத்து. இனிமையாகவும், சாந்தமாகவும், உண்மையாகவும் பேசு. வார்த்தைகளை அளந்து பேசு.

எளிமையாக இரு. மானசீகமாக எல்லா ஜீவராசிகளுக்கும் வணக்கம் செய். எங்கும் தெய்வம் இருப்பதை உணர். நினைவிலோ, சொல்லிலோ, செயலிலோ ஒருவருக்கும் தீங்கு செய்யாதே. உருக்கமானதும் உண்மையானதுமான பிரார்த்தனை மூலம் உன் மனதை இறைவனிடம் ஒன்றாக்கு.

சுவாமி சிவானந்தர்

## திருவிழா திருப்பலி

(யாழ்ப்பாணம்)

கோண்டாவில் புனித செபஸ்தியார் ஆலயத்தில் இன்று மாலை 5 மணிக்கு திருப்பலி நற்கருணை ஆராதனையும் நாளை காலை 7 மணிக்கு திருவிழாத் திருப்பலியும் இடம் பெறவுள்ளது.

இதேவேளை, போர் அனர்த்தங்களினால் சேதமடைந்த நிலையி லுள்ள இவ்வாலயத்தைப் புனரமைக்க நிதிப்பங்களிப்புச் செய்ய விரும்புவோரை உரும்பிராய் பங்குத தந்தையுடன் தொடர்புகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்ட்டுள்ளது. (உ)

### இனப்பிரச்சினைக்கு....

விடுதலைப் புலிகளும் புரிந்துணர்வுடனும் விட்டுக் கொடுப்புடனும் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டுவருவது ஐரோப்பிய சமூகத்தினரை மகிழ்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

சமஷ்டி அரசியல் அமைப்பின் மூலம் இலங்கையின் சிறுபான்மையின மக்களின் உரிமைகளை வழங்கி அவர்களைக் கௌரவிப்பதன் மூலம் நாட்டில் நிரந்தர சமாதானத்தையும் பொருளாதார அபிவிருத்தியையும் அடையமுடியும்என்று கூறிய சபா் நாயகர் கனடா உட்பட பல்வேறு நாடுகளின் அரசியல் நிபுணர்கள் பெல்ஜிய சமஷ்டி அரசியல் முறை பறறி அறிந்து கொள்வதற்காக விஜயம் செய்த வண்ணம் உள்ளனர் என் றும் தெரிவித்துள்ளார். (வ)

### பௌத்த...

உள்ளதாகவும்,அதன் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டியது அவசியமானதென்றும், நிரஞ்சன் விஜயரத்ன தூதுவர் சென்னுக்கு இச் சந்திப்பின் போது விளக்கிக் கூறினார்.

அதனை ஏற்றுக்கொண்ட தூதுவர் இந்திய அரசு பௌத்த சமயப் பாதுகாப்பை உறுதிப்படுத்த முழு ஒத்துழைப்பும் வழங்குமென்று உறுதி யளித்தார். (இ-10)

### அரசையும்...

கூறிய அகாஷி,ஐக்கிய இலங்கைக்குள் சுயநிர்ணய உரிமை உறுதி செய்யப்படும் பட்சத்தில் புலிகள் தமது ஆயுதங்களைக் கைவிடுவதாக அன்ரன் பாலசிங்கம் கூறியிருக்கிறார் என்று தெரிவித்தார்.

வானொலிக் கருவிகளின் இறக்குமதி பற்றி அவர் கருத்துக் கூறவில்லை என்று தெரிவிக்கப் படுகின்றது. (இ)

## கட்டுநாயக்காவில் அவசரமாக தரையிறங்கிய ஜெட் விமானம்

(கொழும்பு)

கட்டுநாயக்கா விமான நிலையத்தில் ஜெட் விமானம் ஒன்று அவசர அவசரமாக நேற்று முன் தினம் பிற்பகல் தரையிறங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாங்கொக்கில் இருந்து புறப்பட்டு மாலைதீவுக்குச் சென்ற விமானம் வழியில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாக தரையிறங்கியதாக பின்னர் தெரியவந்தது.

தரையிறங்கிய விமானத்தில் 4 பயணிகள் உட்பட ஜெட் விமானத்தின் விமானிகளும் இருந்ததாகவும், 35 ஆயிரம் அடி உயரத்தில் பறந்துகொண்டிருந்த போதே ஜெட் விமானத்தில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)

## பாதுகாப்பு...

உபகுழுக் கூட்டத்தில் இருந்து விலகினாலும் அது சமாதானப் பேச்சுவார்த்தையை ஒரு போதும் பாதிக்க மாட்டாது. இந்நிலையில் சமாதான முயற்சிகள் தொடர்ந்தும் முன்னெடுத்துச் செல்லப்படும் என்றும் தெரிவித்துள்ளனர். (ம)

## இலங்கை...

இதே வேளை வடக்குக் கிழக்குப் பகுதியில் வெற்றிட மாக உள்ள 117 நிர்வாக சேவை வெற்றிடங்களையும் நிரப்புவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக குறிப்பிட்டுள்ளார். (வ)

## அதி உயர்....

இலங்கை இராணுவத்தினர் அமைத்துள்ள உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் உள்ள பல ஆயிரக்கணக்கான வீடுகளில் இராணுவத்தினர் இன்னமும் முகாமமைத்துள்ளனர். இதனால் மக்கள் சமாதானத்தின் பெறு பேறுகளை அனுபவிக்க முடியாதுள்ளது. போரினால் சகலதையும் இழந்த மக்களுக்கு அடிபபடைக் கட்டுமானங்களை வழங்கி அவர்களை அங்கு மீளக்குடியமர்த்த வேண்டும். மக்களை அங்கு மீளக் குடியமர்த்துவதற்கு வசதியாக அங்குள்ள கண்ணி வெடிகளை முழுமையாக அகற்றி அங்கு அபிவிருத்திப் பணிகளைச் செய்ய வேண்டும்.

அவசர புனர்வாழ்வு வேலைகளைக் கவனிப்பதற்காக அமைக்கப்பட்ட ''சிரான்'' அமைப்புக் குறித்தும் சு.ப.தமிழ்ச்செல்வன் பிரித் தானிய தூதுக் குழுவினருக்கு விளக்கிக் கூறினார். இதனை அடுத்து சிரான் மூலமாக உதவிகளை வழங்குவதற்குப் பிரித்தானியத் தூதுக்குழுவினர் விருப்பம் தெரிவித்துள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

பிரித்தானியத் தூதுவர் ஸ்ரீபன் இவானஸ் தலைமையில், பிரித்தானியாவின் தெற்காசியப் பிராந்தியத்தைச் சேர்ந்த ஸ்ரீபன் ஸ்மித், இலங்கைக் கான பிரித்தானிய தூதரக முதன்மைச் செயலாளர் பெனிதோக், பிரித்தானிய தூதராக மூன்றாவது செயலர் கொலின் கொக்கல், திட்டமிடல் அதிகாரி ஹமிலா சுக்கன் மற்றும் பிரித்தானிய தூதரக ஊடக அதிகாரி நிலக்ஷன் சுவர்ணராசா ஆகியோர் தூதுக் குழுவில் இடம்பெற்றிருந்தனர்.

சு.ப.தமிழ்ச்செல்வனுடனான இச்சந்திப்பையடுத்து ஏ-9 கண்டி வீதியூடாக பிரித்தானியத் தூது குழுவினர் நேற்று யாழ்ப்பாணம் வந்தடைந்துள்ளனர். (ம)


# நாட்டிய கலாகேந்திரா



### வழங்கும்

# பரத நாட்டிய அரங்கேற்றம்

அன்புடையீர்!



**திருமதி.கிருஷாந்தி இரவீந்திரா**

(முதுதத்துவமாணி-நடனம்)
சிரேஷ்ட விரிவுரையாளர் - இராமநாதன்
நுண்கலைக்கழகம்
யாழ்.பல்கலைக்கழகம்
அவர்களின் மாணவியும்,ஏகபுத்திரியுமான

**செல்வி.துஸ்யந்தி இரவீந்திரா**

அவர்களின் பரதநாட்டிய அரங்கேற்றம்
19.01.2003 ஞாயிற்றுக்கிழமை மாலை 2.00 மணிக்கு

**யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்**

பிரதம விருந்தினர்

**பத்மஸ்ரீ அடையாறு கே.லக்ஷ்மணன்**

(இயக்குநர்-பரதசூடாமணி)

**குயிலுவக் கலைஞர்கள்**

நட்டுவாங்கம்
நடன ஆக்கம்:- திருமதி கிருஷாந்தி இரவீந்திரா
(சிரேஷ்ட விரிவுரையாளர்,நடனத்துறை,யாழ்.பல்கலைக் கழகம்)
பாட்டு:-செல்வன்.தவநாதன் றொபேட்
(விரிவுரையாளர் இசைத்துறை,யாழ்.பல்கலைக் கழகம்)
மிருதங்கம்:-லயஞான வாரிதி-திரு.சி.மகேந்திரன்
(விரிவுரையாளர் நடனத்துறை,யாழ்.பல்கலைக் கழகம்)
வயலின்:-செல்வி.பாக்கியலஷ்மி நடராஜா
(சிரேஷ்ட விரிவுரையாளர்,இசைத்துறை,யாழ்.பல்கலைக்கழகம்)
வீணை:-வீணை வித்துவான் பிரம்மஸ்ரீ.ம.சோமசுந்தர சர்மா.
புல்லாங்குழல்:-புல்லாங்குழல் வித்துவான்
திரு.இராதாகிருஷ்ணன் வசந்தன்



கற்றவர்கள், கலாவித்தகர்கள், கலை ஆர்வலர்கள் முன்னனிலையில் நடைபெறவிருப்பதால் தாங்கள் குடும்ப சமேதராய் வருகை தந்து சிறப்பிக்குமாறு அன்புடன் ஆழைக்கின்றோம்

நன்றி

தங்கள் நல்வரவை நாடும்


கொமர்ஷல் வங்கி
யாழ்ப்பாணம்

**திரு.திருமதி.இரவீந்திரா**

இராமநாதன் நுண்கலைக்கழகம்
யாழ்.பல்கலைக்கழகம்.


# ஆத்மார்த்த அஞ்சலி

முன்னாள் இ.த.ஆ. சங்க யாழ் மாவட்டச் செயலாளர்



அமரர்

## சிவகுரு சிவபாலசிங்கம்

அவர்கள் 04.01.2003 அன்று அமரத்துவம் அடைந்த செய்தி கேட்டு ஆழ்ந்த கவலையடைகின்றோம். அன்னாரின் இழப்பால் துயருறும் அவரின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்து அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக் கின்றோம்

*பாடசாலை அபிவிருத்திச் சங்கம்*
*கொக்குவில் இந்துக் கல்லூரி*

# நன்றி நவிலல்



மார்கழி பத்தொன்பது 2002 ல் காலமான
எங்கள் குடும்பத் தலைவி

## திருமதி.தவமணி நடராஜா

அவர்கள் சிவபதம் அடைந்த செய்தி கேட்டு அனுதாபம் தெரிவித்தும். மரணச் சடங்கில் கலந்து கொண்டும், பலவகையான உதவிகள் புரிந்தவர்கட்கும், ஆறுதற் செய்திகள் அனுப்பிய உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவருக்கும், யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ் பல்கலைக்கழக சமூகத்தினருக்கும், தை மூன்று 2003 அன்று நடந்த ஆத்ம சாந்தி கிரியைகள் முதலியவற்றில் கலந்து கொண்டோர்க்கும் அன்று பல வகையில் உதவினோர்க்கும் எமது உளம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

57, அரசடி வீதி
யாழ்ப்பாணம்

இளைப்பாறிய பேராசிரியை
திருமதி.நவமணி செல்வராஜா
குடும்பத்தினர்

6467


# RAMCO CEMENT
# ராம்கோ சிமெந்து

இலங்கையில் மட்டுமா? இல்லை!

S.L.S. 107 அங்கீகாரம் பெற்றது
I.S.O. 9002 தரம் பெற்றது
B.S.S.12-1991 தரத்திற்கு அமைவானது

இந்தியாவில் மட்டுமா? இல்லவே இல்லை!!

ஆசியாவின் முதலாம்தர (நம்பர் 1) தொழிற்சாலையாகத் தெரிவுசெய்யப்பட்ட தொழிற்சாலையில் உற்பத்தி செய்யப்படும் RAMCO சிமெந்து (கோபுரமார்க்) என்பதை மககளுக்கு மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்

தற்பொழுது ராம்கோ சிமெந்து பருத்தித்துறை இறங்குதுறையில் இறக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. முன்கூட்டியே பதிவு செய்பவர்களுக்கு முன்னுரிமை அடிப்படையில் நேரடியாக விநியோகிக்கப்படும்

**ராம்கோ சிமெந்து ஏக இறக்குமதியாளர்:**

## ஈஸ்வர பகவான் & கொம்பனி

91, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

T.P. 021 2222350

C5643



# MEDICAL CHECK UP
# வைத்திய பரிசோதனை

**நோய் வருமுன் காப்போம்**
**திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்**

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள, நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்
- X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள்.
சிறுநீர்ப்பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!

போக்குவரத்து வசதி கருதி

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**

(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

[C/5602]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 19.01.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.